ஸ்தோத்ரமாலா —ஸீரீஸ் நெ. க.

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான

ஸ்ரீகூரநாராயண ஜீயர் ஸ்வாமி

திருவாய் மலர்ந்தருளிய

ஸுதர்சநசதகம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்

அண்ணங்கராசாரியர் இயற்றிய

பதவுரை விசேஷவுரையுடன்,

மதுரை:

ஹரிஸமயதிவாகர அச்சுக்கூடத்தில்

அச்சிடுவிக்கப்பட்டது.

1926,

இதன் விலை 0—12—0] [போஸ்டேஜ் தனி.




பெருமாள் கோயில், பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசாரியர்.

(ஸ்தோத்ர, திவ்யப்ரபந்த-வ்யாக்யாதா.)

Kumaran Press, Conjeeveram.

ஸ்ரீ:



“ஜ்யோதிஷ்மந்தோ விஜயந்தாம்”

முன்னுரை.

திருவரங்கம் பெரிய கோயிலில் ஸ்ரீரங்க நாராயணஜீயர்ஸ்வாமி மடத்தில் அதிபதிகளாக எழுந்தருளியிருந்த ஸ்வாமிகளுள் ஒருவரான ஸ்ரீக்ருஷ்ண நாராயணஜீயர்ஸ்வாமி திருவாய் மலர்ந்தருளிய ஸாதந பஞ்சகமென்னும் இந்த ஸ்தோத்ரம் ஸப்தஸந்தர்ப்ப மாதுர்யத்தாலும் அர்த்தகௌரவத்தாலும் ஒப்புயர்வற்றதென்னுமிடம் ப்ரஸித்தமேயாம். ஆரோக்யம், ஐஸ்வர்யம், ஆயுஸ்ஸு முதலிய பலன்களை விரும்புமவர்கள் ஸங்கல்ப்ய நியமபூர்வகமாக இந்த ஸ்தோத்ர பாராயணம் செய்து இஷ்டப்ராப்திகளையும் அநிஷ்டநிவ்ருத்திகளையும் எளிதில் பெறுகிறார்களென்பதும் ஸர்வப்ரஸித்தம். அநந்யப்ரயோஜநர்களான முமுக்ஷுக்களுக்கும் இந்த ஸ்தோத்ரம் நித்யாநுஸந்தேயமென்பதில் விப்ரதிபத்தி இல்லை.

ஆகவே, ஸஞ்ஜீவநமும் ஸர்வோபஜீவநமுமான இந்த ஸ்தோத்ரத்திற்குப் பொருள் தெரிந்துகொள்ளவேண்டியது அனைவர்க்கும் ஆவஸ்யகம். இதற்கு அதிஸங்க்ஷிப்தமான ஸம்ஸ்க்ருத டிப்பணி ஒன்றிருந்தாலும் ஸர்வஸாதாரணமான நடையில் தமிழுரையொன்று இருக்கவேண்டியது ஆவஸ்யகமேயாம். இங்ஙனே ஓருரை எழுதும்படியாகப் பலபெரியோர்கள் * பொருளல்லாதவென்னைப்பொருளாக்கி நியமித்தருளினமையால் அந்த நியமனத்தைச் சிரமேற்கொண்ட அடியேன் அஜ்ஞர்க்கும் ப்ராஜ்ஞர்க்கும் வாசியற உபகாரகமாம்படி உரையெழுதத் தொடங்குகின்றேன். நியமேந ப்ரதிபதார்த்தமும், ப்ராயேண தாத்பர்யமும், க்வசித் விஸேஷார்த்தமும், இன்

றியமையாத இடங்களில் பதங்களின் வ்யுத்பத்திவிவரணமும், தேவையான புராண வரலாறுகளும் இதில் வரையப்படும்.

இரவிலும் விரைவிலும் எழுதுவதனால் நேரும் பிழைகளையும், மானிடரியற்கைக்குரிய அஜ்ஞானாதிகளால் நேரும் பிழைகளையும் மற்றும் அச்சுப் பிழைகளையும் பெரியோர் பொறுத்தருளி, க்ஷமாகுணஸம்பந்நர்களாக விளங்குவார்களென்று விஸ்வஸிக்கிறேன். அன்றி, குற்றங்குறைகளை எடுத்துக் கூறுவார் பக்கல் க்ருதஜ்ஞனாகவுமிருப்பேன்; அவை திருத்தவும்படும். நிற்க,

இந்த ஸம்ப்ரதாயக்ரந்தத்திற்கு கர்த்தாவான ஸ்ரீ கூரநாராயண ஜீயர் ஸ்வாமி எக்காலத்தவர்? எவ்வாசிரியருடைய திருவடிஸம்பந்தி? இன்னும் என்னென்ன க்ரந்தங்கருளிச் செய்துள்ளார்? இத்யாதி விஷயங்களைப் பலர் விமர்சிக்கப் புகுந்து அவரவர் மனம்போனபடி பேசிப்போருவர். ப்ராமாணிகர்களான பெரியோர்பக்கல் கேட்டுணர்ந்ததை அடியேன் இங்கு ஸங்க்ரஹித்தெழுதுகின்றேன்;—இவர் கூரத்தாழ்வானுடைய காலத்திலே எழுந்தருளியிருந்தவரும், ஸாக்ஷாத் அவருடைய திருவடிகளிலே ஆஶ்ரயித்து ஸகலஶாஸ்த்ரங்களையும் கற்றுணர்ந்தவருமாவர்.

“கோயிலொழுகு” என்னும் க்ரந்தத்தில் “கூரநாராயணஜீயர் வைபவம்” என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டுள்ள சில பங்க்திகளை இங்கே உதாஹரிப்போம்:—“நஞ்சீயர் உபந்யாஸம் நிர்வஹித்துக் கொண்டிருக்கிற காலத்திலே, விண்ணப்பஞ் செய்வாரிலே ஒருத்தர் பெருமாள் ஸந்நிதிக்கு யோக்யமாகாமலிருக்க, ஆழ்வானுடைய தேவிகள் ஆண்டாள் அவரிடத்தில் க்ருபையாலே ஆழ்வான் திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளியிருக்கச் செய்தே ஆழ்வான் திருவடிகளிலே ஆஶ்ரயித்து ஸந்யஸித்து ஸர்வஜ்ஞராய் ஆசார்யன் குடியே நிரூபகமாகக் ‘கூரநாராயணஜீயர்’ என்று திருநாமத்தையுடையவராய் ஸஹாஶாஸ்த்ரசராய்க்கோயில்வாஸம் பண்ணிக்கொண்டிருக்கிறவரை அழைத்து, ‘உம்முடைய ஶாஸ்த்ரங்களும்ஒரு கைங்கர்யத்திலே உபயோகிக்கும்’ என்று சொல்லியிருந்தீரே, நீர் இப்போது இந்த விண்ணப்பஞ் செய்வாரைப் பெருமாள் கைங்கர்யத்துக்கு யோக்ய

ராகும்படி பண்ணும்' என்று நியமிக்க, அந்த கூரநாராயணஜீய ரும் ஸுதர்சநசதகத்தைப் பண்ணி, விண்ணப்பஞ்செய்வார் நோயற்றுப் பெருமாள் ஸேவாகாலத்துக்கு யோக்யராகும்படி பண்ணினார்''—என்று கோயிலொழுகில் எழுதப்பட்டுள்ளது.

ஸம்ஸாராவரோபநிஷத்பாஷ்யமியற்றினவரும் இந்த கூரநாராயணஜீயரேயென்றும். தைத்திரீயோபநிஷத்பாஷ்யமியற்றினவரும் இவரேயென்றும் சிலர் கூறுவதெல்லாம் ப்ராந்திவிலஸிதமேயாம். ஸ்ரீவேதாந்ததேசிகனுடைய காலத்துக்குப் பிற்பட்டவராயும் அஹோபில மடாதிபதியாயுமிருந்த ஸ்ரீவத்ஸாங்க ஸ்ரீநாராயணமுநியென்பவரால் செய்தருளப்பட்டது ஸம்ஸாராவரோபநிஷத்பாஷ்யம். அந்த பாஷ்யத்தின் அவஸாநத்திலே "வேதாந்தமார்க பாதாப்ஜ ப்ருங்கராஜநிபசேதஸா । வாதிவேதாந்தஸாரார்ய: ஸ்ரீவத்ஸாங்கேந பாஷித:" என்று அவர் தம்மாலே எழுதப்பட்டுள்ள ச்லோகமும் நோக்கத்தக்கது.

இனி தைத்திரீயோபநிஷத்பாஷ்யம் அருளிச்செய்தவரும் ஸுதர்சநசதக கர்த்தாவும் அபிந்நவ்யக்தியோவென்னில்; அன்று. ஸுதர்சநசதக கர்த்ரு கூரநாராயணஜீயர்க்குப்பின் த்ருதீய பட்டஸ்தராக ஸ்ரீரங்கநாராயணஜீயர் மடத்தில் எழுந்தருளியிருந்தவரும், நலந்திகழ் நாராயணஜீயர் என்றும் ஸ்ரீரங்கராஜஜீயர் என்றும் மறுதிருநாமங்களையுடையவருமான ஸ்வாமியே தைத்திரீயோபநிஷத்பாஷ்யகர்த்தாவாவர். ஆகையாலே, ஸுதர்சநசதககாரரும் ஸம்ஸாராவரோபநிஷத்பாஷ்யகாரரும் தைத்திரீயோபநிஷத்பாஷ்யகாரரும் பரஸ்பரம் பிந்நபிந்நவ்யக்திகளென்று தெளியக்கடவது.

முதற்கூரநாராயணஜீயர் ஸ்வாமியின் வைபவம் கோயிலொழுகில் சுருக்கமாகவும், ஸ்ரீரங்கநாராயணஸ்வாமி மடப்ரகாசிகையில் சிறிது விரிவாகவும் காணத்தகும். இவர் அறுபது திருநக்ஷத்ரம் எழுந்தருளியிருந்தார்.

இவர் மந்த்ரசக்தி ப்ரபாவத்தாலே அழகிய மணவாளனுக்குப்பல கைங்கர்யங்கள் நிர்வஹித்துப் போந்தாரென்றும், இவருடைய காலத்தில் 'யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தா மஹாபாகா மஹீயதே।

நதத்ருஸம்ஜீவிஷ்யதி வ்யாதிநா ஸஹிதக்ஷதவஸ்யா:” என்ற ப்ரமாணம் ஸத்யமாகவேயிருந்ததென்றும் ஆசார்யர் அருளிச்செய்யக் கேட்டிருக்கை.

இவர் அருளிச்செய்த க்ரந்தங்களில் ஸுதர்சநஸதகமொன்றே ப்ரஸித்தமாயிராநின்றது. கோயிலில் ஸ்ரீரங்கநாராயணஜீயர் மடத்தில் ஆசார்யவிக்ரஹங்களெழுந்தருளியிருக்கிற இவருடைய திவ்ய மங்களவிக்ரஹத்தின் ஸிம்ஹாஸநத்தில் நான்கு ஜீயர்களை எழுந்தருளப் பண்ணியிருக்கக் காண்கையாலே இவர்க்கு நான்கு ஜீயர்கள் ப்ரதாந சிஷ்யர்களாக இருந்தனரென்று தெரிகிறது. மற்றும் இவரது விசேஷங்களை வல்லார்வாய்க் கேட்டுணர்க.

இந்த ஸுதர்சநஸதகம் நிகமநஸ்லோகமுட்பட நூற்றொரு ஸ்லோகங்கள் கொண்டது. இதில், இருபத்தொன்றாவது ஸ்லோகமளவும் ஜ்வாலாவர்ணநமும், அதற்குமேல் முப்பத்தெட்டாம்ஸ்லோகமளவும் நேமிவர்ணநமும், அதற்குமேல் ஐம்பதாம் ஸ்லோகமளவும் ஆரவர்ணநமும், அதற்குமேல் அறுபத்தோராம் ஸ்லோகமளவும் நாபிவர்ணநமும், அதற்குமேல் எழுபத்தொன்றாம் ஸ்லோகமளவும் அக்ஷவர்ணநமும், அதற்குமேல் நூறும்ஸ்லோகமளவும் புருஷவர்ணநமுமாய்ச் செல்லுகிறது.

“துஞ்சும்போதழைமின் துயர்வரில் நினைமின் துயரிலீர் சொல்லிலும் நன்றாம், நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணாவென்னும் நாமம்” என்றாற்போலே ஸர்வாபந்நிவர்த்தநக்ஷமமான இந்த ஸ்தோத்ரம் ஸர்வர்க்கும் ஸதாநுஸந்தேயமாகக் கடவது.

இங்ஙனம்:—
பெருமாள்கோயில், ப்ரதிவாதிபயங்கரம்,
அண்ணங்கரார்ய தாஸன்.

॥ ஶ்ரீ: ॥

ஶ்ரீமதே ராமாநுஜாய நம: ॥

ஶ்ரீகூரநாராயணமஹாமுநீந்த்ர ப்ரணீதஸ்ய

ஶ்ரீஸுதர்ஶநஶதகஸ்ய வ்யாக்யா ।

ஶ்ரீகாஞ்சீ ப்ரதிவாதிபயங்கர-அண்ணங்கராசார்ய விரசிதா ॥

— ∽ —

தனியன்.

ரங்கேஶ விஜ்ஞப்தி கராமயஸ்ய
    சகார சக்ரஶதகம் நிவ்ருத்தயே ।
ஸதாஶ்ரயேஹம் வரவர்ஷிணம் ய:
    தம் கூரநாராயண நாமகம் முநிம் ॥

—

பதவுரை.

ய:—	யாவரொருகூரநாராயண ஜீயர்
ரங்கேஶ விஜ்ஞப்திகர ஆமயஸ்ய நிவ்ருத்தயே	திருவரங்கப்பெருமாளரையருடைய நோய் தீர்வதன்பொருட்டு
வரவர்ஷிண:	அபேக்ஷிதங்களை நிறைவேற்றவல்ல
சக்ர ஶதகம்	திருவாழியாழ்வான்விஷயமான ஸ்தோத்திரமாகிய ஸ்ரீஸுதர்சன சதகத்தை
சகார	அருளிச் செய்தாரோ
தம் கூரநாராயண நாமகம் முநிம்	அந்த ஸ்ரீகூரநாராயணஜீயர் ஸ்வாமியை
அஹம் ஸதாஶ்ரயே	அடியேன் பணிகின்றேன்.

கருத்து:—திருவரங்கப் பெருமாளரையர் திருமேனியில் நோவு சாத்திக் கொண்டிருக்கையில் அதுகண்டு ஸஹித்திருக்கமாட்டாத ஸ்ரீகூரநாராயண ஜீயர்ஸ்வாமி அந்த நோய்தீருவதற்காக ஸ்ரீஸுதர்சனாழ்வான் விஷயமாக நூறு ச்லோகங்கள் கொண்ட ஸ்தோத்திரத்தை யருளிச் செய்தார். இந்த ஸ்தோத்திரமானது ஸர்வாபீஷ்டங்களையும் தலைக்கட்டித் தரவல்லது. இப்படிப்பட்ட ஸ்தோத்ரத்தை யருளிச் செய்த அந்த ஜீயர் ஸ்வாமியை அடியேன் தொழுகின்றே னென்கை............

ஸ்ரீ:

ஸுதர்சநசதகத்தின் அடிவரவு.

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

4. [illegible]

5. [illegible]

6. [illegible]

7. [illegible]

8. [illegible]

9. [illegible]

10. [illegible]

அடிவரவு முற்றிற்று.

ஸ்ரீரஸ்து.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ கூரநாராயண ஜீயர்ஸ்வாமி அருளிச்செய்த

ஸுதர்சநசதகம்.

ஸௌதர்ஶந்யுஜ்ஜிஹாநா
திஶி விதிஶி திரஸ்க்ருத்ய ஸாவித்ரமர்ச்சி:
பாஹ்யாபாஹ்யாந்தகார
க்ஷதஜகதகதங்காரபூம்நா ஸ்வதாம்நா ।
தோ:ஷண்டேசண்டதண்டே
த்வீபாயஶிவாபாயசக்ரோண்ட ஸௌகல்யகல்யா
ஜ்வாலா ஜாஜ்வல்யமாநா விதரது
பவதாம் வீப்ஸயாऽபீப்ஸிதாநி ॥ க ॥

ஸ்ரீ:

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் இயற்றிய பதவுரையும் விசேஷவுரையும்.

கூரநாராயணார்யேண நிர்மிதம் பக்திஶாலிநா ।
ஶ்ரீஸுதர்ஶநசதகம் விவ்ருணோமி ஸதாம் முதே ॥

பதவுரை.

பாஹ்யாபாஹ்யாந்தகாரக்ஷதஜகதகதங்காரபூம்நா — வெளியிலுள்ளதும் உள்ளுள்ளதுமான இருள்களாலே கெட்டுப்போன உலகங்கட்கு வைத்தியனாகும் பெருமையை யுடைய

ஸ்வீயாபா⁴நா — தனது ஒளியினால்
ஸாவித்ரம் மஹ: — ஸூர்யனுடையதான ஒளியை
திரஸ்க்ருத்ய — கீழ்ப்படுத்தி
தி³ஶி விதி³ஶி — எல்லாவிடங்களிலும்
உஜ்ஜிஹாநா — வியாபித்து விளங்குவதும்,

தோ: கண்டூ³த்³தா³ம தை³த்ய
விப்⁴ரமவதீ வதூ⁴
கண்ட² வைத⁴வ்யத³க்ஷா
— புஜங்களிலுள்ள தினவினால் மிகவும் கொக்கரிக்கின்ற அசுரர்களின் பெண்டுகளுடைய கழுத்துகளை[த் தாலியற்றதாக] சூன்யமாக்குவதில் வல்லமை பெற்றதும்,

ஜாஜ்வல்யமாநா — ஒப்புயர்வின்றி ஜ்வலித்துக் கொண்டிருப்பதுமான
ஸௌத³ர்ஶநீ ஜ்வாலா — திருவாழியாழ்வானுடையதான ஜ்வாலையானது
ப⁴வதாம் ஈப்ஸிதாநி — உங்களது விருப்பங்களை
வீப்ஸயா விதரதாத் — அடிக்கடி தந்திடுக.

* * * இது முதல் இருபத்தினான்கு ச்லோகமளவும் திருவாழியாழ்வானுடைய ஜ்வாலையைப் பற்றின வர்ணனையாய்ச் செல்லுகிறது. அதில் இந்த ச்லோகத்தினால் சொல்லப்படுவது யாதெனில்;

உலகத்தில் இருள் இருவகைப்படும்; அகவிருள் என்றும் புறவிருள் என்றும். அகவிருள் அஜ்ஞாநாந்தகாரமெனப்படும்; புறவிருளென்பது ப்ரஸித்தமானதேயாம். இவ்விரண்டுவகையிருளாலும் தடுமாறுகின்ற உலகத்தவர்கட்கு அவ்விருளைத் தொலைத்தருளி வாழ்விக்கவல்ல வொளியினால் ஸூர்யனுடைய தேஜஸ்ஸைத் திரஸ்கரித்திருக்கும் ஸுதர்சந ஜ்வாலை. (ஸூர்யன் புறவிருளொன்றை மாத்திரமேயன்றோ போக்கவல்லன்.) அசுரர்களுக்கு எப்போதும் யுத்தம் செய்வதிலேயே உத்ஸாஹமாதலால் சண்டைக்கு யார் அகப்படுவார்களென்று அவர்களுடைய புஜங்கள் தினவுகொண்டு அதனால் அவர்கள் மிகவும் கொக்கரிப்பார்கள்; அன்னவர்களைத் தொலைத்து அவர்களது பெண்டிரைக் கைம்பெண்டாட்டிகளாக ஆக்கவல்லதுமான ஸ்ரீஸுதர்சந ஜ்வாலை உங்களுடைய அபீஷ்டங்களைப் பரிபூர்ணமாக்குக என்பதாம்.

[illegible] '[illegible]' என்கிற பாதமானது உத் என்னும் உபஸர்க்கத்தை முற்கொண்டு [illegible] மாயிருக்கிறது. [illegible] [illegible] [illegible] (ஸாதிதஸ்ய) [illegible] ([illegible]) [illegible] "[illegible]" என்ற பாடமும் ஏற்கும்; பொருள் ஒக்கும். [illegible] மான என்றுமாம், ஸமர்த்தமான என்றுமாம். [illegible] [illegible].

இந்த ச்லோகம் முழுதும் ஸ்வபாவோக்தம்......... (க)

[illegible] ॥ (உ)

[illegible]	பூலோகத்தில்
[illegible]	மேரு பர்வதத்தினது காந்திகளி[னல்]
[illegible]	ஸேவிக்கப் பெற்றதும்
[illegible]	ஆகாசத்தில்
[illegible]	ஸூர்யனுடைய
[illegible]	கிரணங்களினல்
[illegible]	எதிர்கொண்டு உபசரிக்கப்பட்ட[தும்,]
[illegible]	ஸ்வர்க்கலோகத்தில்
[illegible]	தேவர்களின் மாளிகைகளினுடைய (அல்லது) நக்ஷத்ராதி தேஜ: பதார்த்தங்களினுடைய
[illegible]	ப்ரகாசங்களினல்
[illegible]	சிச்ரூஷை பண்ணப்பெற்றதும்
[illegible]	ஸர்வதிக்குகளிலும் சுழன்றுவியாபித்து நெருங்கின தீப்பொறிகளையுடையதும்

த்ரைலோக்ய விஜயவ்யக்ரம்	மூவுலகங்களையும் வெல்வதில் முயற்சியுடையதும்
(சக்ரம்)	
ஜாக்ரத் தாபம்	எப்போதும் விளங்காநின்ற தாப சக்தியையுடையதும்
உக்ரம்	(எதிரிகட்கு) பயங்கரமும்
சாக்ரம்	திருவாழியாழ்வானுடையதுமான
தத்	அப்படிப்பட்ட [ப்ரஸித்தமான]
மஹ:	தேஜஸ்ஸானது
வ:	உங்களுக்கு
பூயஸே	மிகவும் அதிகமான
பூதயே	செல்வத்தின் பொருட்டு
பூயாத்	விளங்குக.

* * * நான்காம் பாதத்திலுள்ள "த்ரைலோக்ய விஜய வ்யக்ரம்" என்ற விசேஷணத்தைப் பூர்வார்த்தமும் விவரிக்கிறது. "பாடக்ரமாதர்த்தக்ரமோ பலீயாந்" என்ற நியாயத்தை யடியொற்றி "பூமௌ ஸௌமேரவீசிபி: பாநுபி: வ்யோம்நி" என்று முதலில் யோஜிக்கப்பட்டது; "பாதாலே தைத்யாஸுரீணாம் தைத்யநீபா:" என்றிறே அடைவு.

பூலோகத்தில் மேருபர்வதத்தின் ஒளிகள் திருவாழியாழ்வானுடைய திவ்ய தேஜஸ்ஸுக்கு அடிமை செய்கின்றனவென்றது—மேருமலையின் நிரம்பிய ஒளிகளிற் காட்டிலும் மேம்பட்டு விளங்குவது ஸ்ரீஸுதர்சந தேஜஸ்ஸு என்றபடி. ஆகாசத்தில் இரவியின் கதிர்கள் எதிர்கொள்ளுகின்றனவென்றும், பாதாலலோகத்தில் தைத்யாநாம் தீப்திகள் சிச்ரூஷை செய்கின்றனவென்றும் சொன்னதற்கும் அதுவே கருத்தாம். எனவே மூவுலகங்களிலும் உள்ள தேஜ:பதார்த்தங்களையெல்லாம் வென்று வீறுபெற்று விளங்குவது திருவாழியாழ்வானுடைய தேஜஸ்ஸு என்றதாயிற்று.

பின்னடிகளின் கருத்து ஸ்பஷ்டம். ஸுமேரோ: ஜாதா:— ஸௌமேரய:, தாபி:. [தைத்யநாரீணாம்] 'யாம' என்னும் பதம் ப்ர

ஹத்துக்கும் தேஜஸ்ஸுக்கும் வாசகமாகையாலே இரண்டுவகையான பொருள்களும் இங்கு விவக்ஷித்துக் கொள்ளப்பட்டன. சுதர்சனம் ஸஹஸ்ராயுதம் ஸஹஸ்ரார்ச்சிஸம் ...... (௨)

பூர்ணம் பூரைஸ்ஸுதாநாம் ஸுமஹதி லஸத: சந்த்ரபிம்பாலவாலே பாஹாசாகாவ்யாப்தக்ஷிதிககநதிவ: சக்ரராஜத்ருமஸ்ய। ஜ்யோதிஸ்ஸ்பாரப்ரவாள: ப்ரகடிதஸுமநஸ்ஸம்பதுத்தம்ஸலக்ஷ்மீம், வஹந் ஸீமாவேஷ்டு ப்ருதிசது பவதாம் ஸமுத்க்ருஷ்டாம் ப்ரஹ்ருஷ்டிம் ‖ (௩)

ஸுதாநாம் பூரை:	அம்ருதரஸ ப்ரவாஹங்களாலே
பூர்ணம்	நிறைந்ததாயும்
ஸுமஹதி	மிக்க பெருமை பொருந்தியதாயிருக்கிற
சந்த்ரபிம்ப ஆலவாலே	சந்திரபிம்பமாகிற பாத்தியில்
லஸத:	விளங்காநின்றதாய்
பாஹாசாகாவ்யாப்த க்ஷிதி ககந திவ:	புஜங்களாகிற கிளைகளினாலே பூமியையும் ஆகாயத்தையும் ஸ்வர்க்கத்தையும் ஆக்கிரமித்ததாயுள்ள
சக்ரராஜத்ருமஸ்ய	திருவாழியாழ்வானாகிற கல்பவ்ருக்ஷத்தினுடைய—,
ப்ரகடிதஸுமநஸ்ஸம்பத்	புஷ்பலக்ஷ்மியை விளக்குவதாயும்—தேவதைகளின் செல்வத்தை விளங்கச்செய்வதாயும்
ஸீமாவேஷ்டு உத்தம்ஸலக்ஷ்மீம் வஹந்	திங்மண்டலங்களில் ஸிரோபூஷணசோபையைப் பெருக்காநின்றதாயுமுள்ள
ஜ்யோதிஸ்ஸ்பாரப்ரவாள:	ஜ்யோதிஸ்ஸென்னும் தளிரானது
பவதாம்	உங்களுக்கு
ஸமுத்க்ருஷ்டாம்	மேன்மைபொருந்திய
ப்ரஹ்ருஷ்டிம்	ஸந்தோஷத்தை
ப்ருதிசது	தந்திடுக.

* * * திருவாழியாழ்வானை ஒரு வ்ருக்ஷமாகவும் அவருடைய சோதியை ப்ரவாளமாகவும் ரூபணம் பண்ணிப்பேசுகிறார் இதில். உலகத்தில் வ்ருக்ஷமானது தண்ணீர் நிறைந்த பாத்தியில் விளங்கும்; சுற்றிலும் தழைத்தோங்குகின்ற கிளைகளையுடைத்தாயிருக்கும்; அத்தன்மை திருவாழியாழ்வானுக்கும் பொருந்தினபடி சொல்லுகிறது பூர்வார்த்தத்தில்.—அம்ருதவெள்ளம் நிறைந்த சந்திரபிம்பமாகிற பாத்தியில் விளங்காநின்றதாய்த்து ஸ்ரீஸுதர்சன வ்ருக்ஷம். சக்கரத்தாழ்வான் சந்திரமண்டலத்தில் விளங்குவதாகச் சொல்லுகிறவிதற்குக் கருத்து என்னென்னில்; ஸுதர்சநயந்த்ரஸம்ஸ்தாநக்ரமம் சொல்லுமிடத்து ஸ்ரீஸுதர்சனாழ்வான் சந்திரமண்டலத்தில் எழுந்தருளியிருக்கும் வண்ணமாகச் சொல்லப்பட்டிருத்தலால் இங்ஙனே அருளிச் செய்யப்பட்டது. "சந்த்ரபிம்பஸ்ய மத்யஸ்தம் தாரம் ஷட்கோணஸம்ஹித: । தஸ்ய மத்யே ஸ்திதம் தேவம் ரக்தவர்ணம் ஸுதர்சநம்" என்று அஹிர்புத்ந்யஸம்ஹிதையில் இருபத்தாறும் அத்யாயத்தில் (ச்லோ-5) சொல்லப்பட்டதிறே. இந்த சதகந்தன்னிலும், மேல் 'ப்ரணவஸசயநாயாரஷட்கோணவர்த்தி' என்றும் "சந்த்ராய: கார்யயந்த்ரவர்ஷீச" என்றும் "ஸ்வைசசசயம் ப்ரேக்ஷ்ய தந்த்ராநுஷக்த:" என்றுமருளிச் செய்திருப்பவை இங்கே ஸ்மரிக்கத்தக்கன. உலகத்தில் வ்ருக்ஷம் தண்ணீர் நிறைந்த பாத்தியில் விளங்குவதுபோல் இந்த ஸ்ரீஸுதர்சன வ்ருக்ஷம் ஸுதாப்ரவாஹபூர்ணமான சந்த்ரபிம்பமாகிற பாத்தியில் விளங்காநின்றதென்றதாயிற்று.

வ்ருக்ஷமானது சுற்றிலும் தழைத்தோங்காநின்ற கிளைகளினால் கீழும் மேலும் இடமடைத்துக்கொண்டு விளங்குவதுபோல் இந்த ஸுதர்சன வ்ருக்ஷம் தனது திருக்கைகளாகிற சாகைகளினாலே ஊர்த்வாதரதிசிகளையெல்லாம் இடமடைத்துக் கிடக்கிறதென்கிறது இரண்டாம் பாதம். நீண்ட கைகளைக் கிளைகளோடு ஒப்பிடுதல் கவி மரபு. "சக்ரராஜத்ருமஸ்ய" என்றவிடத்து த்ரும சப்தம் ஸாமாந்யமாயிருந்தாலும் இங்கே கல்பவ்ருக்ஷமாகிற விசேஷத்துக்கு வாசகமாகக்கடவது. அன்றியே, த்ருமாணாம் ராஜா— ராஜத்ரும:, சக்ரமேவ ராஜத்ரும: என்று வ்யுத்பத்தி பண்ணுவா

ரும் சிலருளர். வ்ருக்ஷத்தில் செந்தளிர் உண்டாகிறாப்போல் இந்த ஸுதர்சந வ்ருக்ஷத்தில் செவ்விய சோதியே ப்ரவாளமென்கிறார். [ப்ரகடிதஸுமநஸ்ஸம்பத] பல்லவமானது புஷ்பஸம்பத்தை விளக்குமே; அப்படியே இந்த ஸுதர்சந ஜ்யோதிஃப்ரவாளமும் செய்யா நின்றதென்பதை ச்லேஷரீதியாலே சொல்லுகிறார். ஸுமநஸ்ஸப்தம் புஷ்பத்துக்கும் தேவதைகளுக்கும் வாசகம். பல்லவமானது ஸுமநஸ்ஸுக்களான புஷ்பத்தின் ஸம்பத்தை ப்ரகடநம் செய்யும்; ஸுதர்சந ஜ்யோதிஃப்ரவாளமானது ஸுமநஸ்ஸுக்களான தேவதைகளின் செல்வத்தை ப்ரகடநம் செய்யா நிற்குமென்க. தேவர்களின் செல்வத்தைக் கொள்ளை கொண்டு அவர்களை நலிகின்ற அஸுரராக்ஷஸர்களை அழிக்கும் முகத்தால் ஸுதர்சநஜ்யோதிஸ்ஸானது தேவதாஸம்பத்ப்ரகடநகாரியாகிறபடி. [க்ருதாமோதவேஷா உத்தம்ஸலக்ஷ்மீம் வஹந்தீ.] மாதர்கள் பல்லவத்தை சிரோபூஷணமாகக் கொள்ளுவார்கள்; ஸுதர்சநஜ்யோதிஸ்ஸும் திக்குக்களில் சிரோபூஷணமாக விளங்காநின்றதாய்த்து. திருவாழியின் சோதியானது திசைகள்தோறும் அழகிதாகப் பரவியிருக்கின்றதென்றபடி. 'க்ருதா'ஸப்தத்தின் ஸ்வாரஸ்யம் நோக்கத்தக்கது.

இவைகளால் ப்ரவாளமென்னவமைந்த ஸுதர்சநஜ்யோதிஸ்ஸானது உங்கட்குச் சிறந்த மகிழ்ச்சியைத் தருகவென்றதாயிற்று. ... ... (௩)

க்ருதாதாரா தஸ்யா ரக்ஷோஜவநா தி விகதக்ஷவ்ருக்ஷாத்யக்ஷா தஃ, நாஸீராயா தநாஸீரிப்ரபாபர்வ பிந்நஸூசீஸ்ஃ துஹிநகிரணஸோமஃ ஸ்வம்ஹஹ ஸைநாபந்மகதஃ ஸசாரரிகேஷயதாநம் வதநஸ்ராமா வதாஸூ ஸாதாஃ வஹதாமாயுதநஃ ॥ (௪)

சாயகேஸ்ய	எம்பெருமானுடையதான
ஹேதேஃ	திருவாழியினுடைய
யத்ஸஃ	யாதொரு தேஜஸ்ஸானது

𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌰𑌃 𑌸𑍍𑌫𑍁𑌰𑌾𑌰𑌃	ஆயிரக்கணக்கான அரஸமூஹத்தினின்றும்,
𑌵𑌿𑌹𑌤𑌵𑌿𑌪𑌕𑍍𑌷𑌪𑌕𑍍𑌷𑌾𑌤𑍍	எதிரிகளைத்தொலைப்பதில் ஸமர்த்தமான
𑌅𑌕𑍍𑌷𑌾𑌤𑍍	அக்ஷத்தில் நின்றும்
𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀𑌸𑌨𑌾𑌭𑍇𑌃	ஸூர்யனேடு ஒத்த
𑌨𑌾𑌭𑍇𑌃	நாபியில் நின்றும்
𑌨𑌿𑌜𑌵𑌿𑌭𑌵𑌵𑌿𑌭𑍂𑌤𑌿𑌨𑍍𑌯𑍂𑌨𑌭𑍂𑌭𑍃𑌤𑍇𑌃	தனது பெருமையினுலே அளவிடப்பட்ட பூமியையுடைத்தான
𑌨𑍇𑌮𑍇𑌃	நேமியில் நின்றும்
𑌸𑍍𑌫𑍁𑌰𑌾𑌰𑌃 𑌵𑌿𑌸𑌰𑌤𑌿	எங்கும் பரவுகின்றதோ,
𑌸𑌕𑌲𑍈𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌭𑌿𑌃	ஒருமிடருன வேதங்களாலே
𑌸𑍍𑌤𑍁𑌤𑌮𑌹𑌿𑌮	துதிக்கப்பட்ட பெருமையையுடையதும்
𑌚𑌤𑍁𑌰𑌾𑌶𑍍𑌯𑌾𑌵𑌕𑌾𑌶	நான்கு திசைகளிலும்
𑌸𑌦𑌾𑌰𑌾𑌨𑌂	பரவுகின்றதுமான
𑌤𑌤𑍍 (𑌮𑌹𑌃)	அந்த ஸ்ரீஸுதர்சந தேஜஸ்ஸு
𑌵𑌃	உங்களுக்கு
𑌚𑌤𑍁𑌰𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍍	(அறம் பொருள் இன்பம் வீடென்னும்) நான்கு புருஷார்த்தங்களையும்
𑌪𑍁𑌷𑍍𑌯𑌤𑌾𑌤𑍍	பெருக்கத் தந்திடுக.

* * * அரம், அக்ஷம், நாபி, நேமி—என்னுமிவை திருவாழியாழ்வானுடைய அவயவங்கள். அந்த அவயவங்கள் தோறும் கிளர்கின்ற ஜ்வாலையே ஸுதர்ஶந ஜ்வாலையாம். (அவயவஸமுதாயமே யிறே அவயவியாகிறது.) அதனுடைய புகழ் ஸகலவேதங்களிலும் பொலியும். அத்தகைய ஸுதர்ஶந ஜ்யோதிஸ்ஸானது அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களையும் உங்களுக்கு அளித்திடுக வென்கிருர்.

"𑌸𑍍𑌫𑍁𑌰𑌾𑌦𑌾𑌰𑌃" என்ற இரண்டனுள் ஒன்று பஞ்சமீபஹுவசநம்; ஒன்று ஸமாஸம். ஸாராணாம் ஸமூஹஃ—ஸ்பூரம்; தஸ்மாத் என்று பஞ்சமீபஹுவசநத்திற்கு வ்யுத்பத்தியாம். ஸப்தமீவிபக்தி யத்ர. "ஶதம், ஸஹஸ்ரம்" இத்யாதிஸம்க்யாவாசக பதங்களை விஶேஷ

ஷணமாகவுடைய விஶேஷ்ய பதங்கள் பஹுவசநாந்தமாக இருக்
கவேணும்; “ஶதம் பாத்ரா:, ஸஹஸ்ரம் பஶவ:” இத்யாதிக
உதாஹரணம். இவ்விடத்தில் ஸஹஸ்ராஸ் ஶரோஹ்ஸ: என்றிரு
கவேணுமேயன்றி ‘கூராஸ்’ என்று ஏகவசநாந்தமாயிருந்தா
பொருந்துமோவென்று விசிகித்ஸை உண்டாகக்கூடியதே;

இதற்கு ஸமாதாநப்ரகாரங்கள் பலவுண்டு:—ஸஹஸ்ர ப
த்யாகவும் ஶரஸமூஹத்தில் ஸாக்ஷாத்தாக அந்வயிப்பதல்ல;
ஸமூஹாவயவமான அரங்களில் அந்வயிக்கும்; ஸமூஹம் ஒன்றேயா
கையாலே “கூராஸ்” என்ற ஏகவசநப்ரயோகம் கூடும் என்
பர் சிலர். இங்ஙனன்றியே, ஸஹஸ்ரஶப்தம் ஸஹஸ்ராவய
வபரமாய் அதன்மேல் ‘அர்ஶஆத்யச்’ என்றுகொண்டால் ‘ஸஹ
ஸ்ராவயவவிஶிஷ்டாஸ் ஶரஸமூஹாஸ்’ என்றதாகிறது என்பர்
சிலர்; இங்ஙனுமன்றிக்கே, நடாதூர் அம்மாளருளிச்செய்த பரத்வா
திபஞ்சகஸ்தோத்ரத்தில் “ஸ்ரீரங்கஸ்தவேங்கடாத்ரிகரிகிரிமுகேஷ்வ
ஷ்டோத்தரேஷ்டாஷ்டே ஸ்தாநே ஸ்ரீநிகேதநேஷு ஸதா ஸா
ந்நித்யாபேக்ஷே” என்ற ஶ்லோகத்தில் “அஷ்டோத்தரஶதே
ஸ்தாநேஷு” என்னுமே “ஸ்தாநே” என்று ஏகவசநப்ரயோ
கம் காண்கையாலே அப்படியே இங்கும் கூடும் என்பர் சிலர். இங்ங
னே நிர்வஹிக்கும் புடைகள் பலகிடந்தாலும் ஹ்ருதயங்கமமான
நிர்வாஹம் ஒன்றுண்டு; அதாவது—ஶராணாம் ஸமூஹ: கூர:
என்று வ்யுத்பத்திபண்ணாமல் ‘ஶராணாம் ஸம்பந்தி கூர:’ என்று
கொண்டு கூரபதத்தை விஶேஷணமாகவும் ஸஹஸ்ரபதத்தை
விஶேஷ்யமாகவுங்கொண்டு “அரங்களினுடையதான ஆயிரத்தில்
நின்றும்” என்று பொருள் கொள்ளுதல் மிக்கபொருத்தமுடையது.
அரங்களினுடைய ஆயிரம் என்றால், ஆயிரம் அரங்கள் என்றே பொ
ருள்படும்: “ஸஹஸ்ரம் காயாநாம் ஶதமத ந ஸம்ஹரிஷ்யதே
நாஸ்” “பத்ராநாம் ஶதஶதேநாஸ்” இத்யாதிஸ்தலங்களில், ஸ
ஹஸ்ரம் காயா:, ஶதம் பத்ராணி—என்று பொருள்படுமாறுகாண்க.

இந்த ஶதகந்தன்னிலே “ஹுதாஶநம் ஹுதவஹம் வோ தீஶ
த்வம் ஶஶதி ஹாஸ்யாணாம்ஶாணாம்” என்ற ப்ரயோகமும்

இங்கே உத்ப்ரேக்ஷாங்கமாகப் பொருந்தும்; 'காரணம் உபமாத்'= ஸஹஸ்ரம் காரணி என்றபடியிறே.

இனி இவ்வழிகளைத்தவிர வேறுவழியுமுண்டாகில் அறிவிற் சிறந்தோர் அங்ஙனே உபபத்தி சொல்லிக்கொள்க.

'தூராத்' என்ற சப்தம் "தூராந்திகவாசிநோ:" என்ற காரகோசத்தின்படி சேய்மை அண்மை என்னுமிருவகைப்பொருள்படும். நெடுந்தூரம் வரையில் என்று இங்கே பொருளாகக்கடவது. ஸமீபத்திலும் உபரத்திலும் என்றுமாம். "நிஜவிஹவமரீசி ஸந்ததிபி:" என்ற நெகிவிஶேஷணம்—ஸ்ரீஸாநுவாதநெசி யானது பூமியிற்காட்டிலும் மிக்க விஸ்தாரமுடைய தென்னுமிடத்தைத் தெரிவிக்கும். "தூராதிய ரக்ஷணஸ்ஸதரஹிதை:" என்னும் பாடமுண்டாம். ... ... (௪)

ஶ்யாமம் யாதவமத்ர க்வசந ஸுகத: க்வாபி வஸ்த்ர ப்ரக்ருத்யா, ஶாஸ்த்ரம் ஶேஷவஸ் ஸாவஸா க்வசந ஶ்ரீராமா க்வாபி தவேஶ்வர ரக்தம்। நீலம் ஶ்ரீநேத்ரகாந்த்யா க்வசிதபி ஶிதாந ஸ்ரீஜ்ஜிதேஶ்வ விஶ்ராம், ஶ்யாதநாநம் விதாநஸ்ரீயமேவ விநாதாபுஷ்ய வஸ்துக்ஷாநம் ॥ (௫)

க்வசந — ஓரிடத்தில்

ஸுகத: — எம்பெருமானுடைய

யாதவமத்ர — திருமேனி நிறத்தின் வ்யாப்தியி

ஶ்யாமம் — பசுமைநிறத்ததாயும் [லே

க்வாபி — ஓரிடத்தில்

ப்ரக்ருத்யா பங்கம் — இயற்கையாகவே பிங்கள வர்ண [மாயும்

க்வசந — மற்றோரிடத்தில்

ஶேஷஸ்ய ஸாவஸா — திருவனந்தாழ்வானுடைய ஒளியி [லே

ஶாஸ்த்ரம் — வெண்ணிறமாயும்

க்வாபி — மற்றுமோரிடத்தில்

தமெஷவ	அந்தத் திருவனந்தாழ்வானுடை
உணிராஜா	மாணிக்கவொளியினாலே [யவே
ரக்தம்	சிவந்ததாயும்
கவிசுவி	இன்னுமோரிடத்தில்
ஸ்ரீநேத்ரகாந்த்யா நீலம்	பிராட்டியினது திருக்கண்களின் காந்தியினாலே நீலநிறத்ததாயும்
(இப்படி நாநாவர்ணங்கள் விரவப்பெற்றமையாலே)	
ஶுசிவஸ் தயோஸ்நவஸ்	ஶுசிதம்பதிகளான பெரியபிராட்டியார்க்கும் பெரியபெருமாளுக்கும்
விசித்ரம் விதாநஶ்ரியம்	விசித்திரமான மேற்கட்டியின் ஶோபையை
ஸ்ருதநாநவ ஷீதம்	விஶேஷமாக உண்டுபண்ணுகின்றதுபோன்றுள்ள
வசுஹாநம்	திருவாழியாழ்வானுடைய தேஜஸ்ஸானது
வஃ	உங்களுக்கு
ஸம்ருத் உவதிநாதா:	ஸௌவ்ருத்தை வளரச்செய்திடுக.

கார்முகில் வண்ணனை எம்பெருமானுடைய திருமேனி யொளியின்பரவுதலினால் சிலவிடங்களில் ஶ்யாமவர்ணமாயும், சிலவிடங்களில் இயற்கையாகப் பிங்களவர்ணமாயும், *அரவத்தமளியின் ஒளியினால் சிலவிடங்களில் ஶுக்லவர்ணமாயும், அத்திருவனந்தாழ்வானுடைய திருமுடியில் விளங்குகின்ற மாணிக்கத்தின் ஒளியினால் சிலவிடங்களில் ரக்தவர்ணமாயும், குவளையங்கண்ணியான பிராட்டியின் திருக்கண்ணொளியினால் சில விடங்களில் நீலவர்ணமாயும் இப்படி பலவகை வர்ணங்கள் விரவப்பெற்றிராநின்ற ஸுதர்ஶந ஜ்யோதிஸ்ஸானது பெருமாளும் பிராட்டியுமாகிற திவ்யதம்பதிகளுக்கு விசித்ரவர்ணமான மேற்கட்டி கட்டினதுபோல் விளங்காநின்றதென்று ஒரு உத்ப்ரேக்ஷை தோற்றப் பேசினாராய்த்து. இப்படிப்பட்ட உத்ப்ரேக்ஷைக்கு ஆஸ்பதமான சோதியானது உங்கட்கு ஸௌவத்தைத்தந்திடுக.

இதில், 'ஶ்யாமம்' என்றும் 'நீலம்' என்றும் இரண்டு பதங்கள் உள்ளன; "க்ருஷ்ணநீலாஸிதஶ்யாம காலஶ்யாமல மேசகா:" என்ற

அமரகோசத்தின்படி இரண்டையும் பர்யாயமாகக் கருதுமவர்கள் பாநருக்தி ஸங்கிப்பார்கள். அங்ஙன் ஸங்கிக்கவேண்டா; அந்தஅமரகோசந்தன்னிலேநாநார்த்தவர்க்கத்தில் "க்ருஷ்ணஸ்யாமௌ ஹரித்க்ருஷ்ணௌ" என்றிருப்பது அறியத்தக்கது.*பாசியின் பசும்புறம் போலு நீர்மை இங்கே ஸ்யாமத்தால் விவக்ஷிதமென்க. [ஸஹஸ்ர] தபஸ்விதாஸ்வர்ணத்தை ஸஹஸ்ரவர்ணமென்பார்கள். ஸா தீர்த்தஜ்யோதிஸ்ஸின் இயற்கையானநிறம் இதுவாம். [ஶேஷஸ்ய] "சென்றால் குடையாம்" இத்தியாதிப்படியே ஸர்வாவஸ்தைகளிலும் சுவிநாஸர்த்தனை திருவனந்தாழ்வானுடைய வென்கை. தாஸ்ய ஏகரஸமன்றே அவனது. — ... (௫)

ஶம்ஸந்த்யுத்யந்தமுச்சாஷிதபரதேஜோ ஸாவிதஸ் தைத்ய ஹாரே:, ஸந்த்யேவ ஸந்த்யேவ நக்தஞ்சரவிஜயகரீ யா ஜகந்நிர்வர்த்யா ஸத்யஶுத்தயஸத்வவிதவிஹிதவஜ்ரபேதீஸா, ராதாங்கஶ்ரீ ஶ்ரீஹஸ்தா பூர்ணாதபா ஸவதாம் ப்ரத்யேகாதாநஹேது: ॥ ||சுரி

ராதாங்கஶ்ரீ	திருவாழியாழ்வானுடைய தான
யா ரஸ்மிஹஸ்தா	யாதொருஜ்வாலாவெவரியானது
உச்சாஷிதபரதேஜஸ: ஸாவித:	சந்திரன் முதலிய மற்ற க்ரஹங்களினுடைய தேஜஸ்ஸைக்கவளீகரித்திருக்கின்ற ஸூர்யனுடைய
உத்யந்தம் ஶம்ஸந்தீ	உதயத்தைத்தெரிவிக்கின்ற
ஸந்த்யேவ	ப்ராதஸ்ஸந்த்யைபோல
உச்சாஷிதபரதேஜஸ: தைத்யஹாரே:	இதர பதார்த்தங்களெல்லாவற்றினுடையவும் தேஜஸ்ஸை இல்லை செய்திருக்கிற எம்பெருமானுடைய
உத்யந்தம்	ஸௌஸீல்யத்தை
ஶம்ஸந்தீ	விளங்கச் செய்யாநின்றதாய்,
நக்தஞ்சரவிஜயகரீ	இரவில் திரிகின்ற துஷ்ட ஜந்துக்களுடையவும் (2) ராக்ஷஸர்களுடையவும் நாசத்தைச் செய்யாநின்றதாய்

ஜகத்வந்த்யா — எல்லாவுலகத்தாலும் உபாஸிக்கத் தக்கதாய்

பந்தூகஸூநாப பந்தூகருசி ஸம்மிலித ஸந்த்யாப்ரபேவாஸ்தி — கோங்குமலர்களின் காந்தியோடொத்த காந்தியோடு சேர்ந்த தேஜஸ்ஸுகளினால் பெருக்கமுற்ற விளங்குகின்றதோ [தாய்

யத்ர —

ஸா — அந்த ஸுதர்சந ஜ்வாலையானது

ஸவதாம் — உங்களுடைய

ப்ரத்யஹோத்தம் அஹ: — நாள்தோறுமுண்டாகும் பாபத்தை

ப்ரணுததாத் — போக்கடிக்கவேணும்.

திருவாழியாழ்வானுடைய ஜ்வாலாவலியை ப்ராதஸ்ஸந்த்யையோடு ஒப்பிட்டுப் பேசுகிறார் ச்லேஷசக்தியாலே. ஸந்த்யையானது [உத்பாஸிதவரஸஹஸ்ரா ஸர்வத: உத்க்ருஷ்டம் ப்ரம்ஸயதீ —] ஸமஸ்த தேஜ: பதார்த்தங்களினுடைய ஒளியையெல்லாம் உள்ளடக்கவல்ல ஸூர்யனுடைய உதயத்தைத் தெரிவிக்குமாபோலே ஸுதர்சநஜ்வாலையானது [உத்பாஸிதவரஸஹஸ்ர: கோடிஸாரோத்க்ருஷ்டம் ப்ரம்ஸயதீ —] ப்ரதிபக்ஷிகளின் தேஜஸ்ஸையெல்லாம் க்ஷபணீகரிக்கவல்ல ஸ்ரீரங்கநாதனுடைய உத்கர்ஷமுண்டு—ஸ்வபதி தடநா வாதாயமும்; அதனை விளக்கா நிற்கும். [நக்தஞ்சரவிஜய கரீ] இரவில் திரியும் க்ரூர ஜந்துக்களெல்லாம் ப்ராதஸ்ஸந்த்யை வந்தவாறே உள்ளடங்கும்; நக்தஞ்சரர்களான ஸகலராக்ஷஸர்கள் ஸுதர்சநஜ்வாலையைக் கண்டவாறே நாசமடைவர்கள்.

[ஜகத்வந்த்யா] "ஸந்த்யாமுபாஸதே" என்று உலகெல்லாம் வணங்குமிறே அதை; இங்கும் "வடிவார் சோதிவலத்துறையுஞ் சுடராழியும் பல்லாண்டு" என்றாருண்டோ?

[பந்தூகஸூநப்ராதி.] ப்ராதஸ்ஸந்த்யாகாலத்திலே ஸூர்யனுடைய செவ்விய சோதிகள் எங்கும் பரவுகையாலே தாராதிக மேகராசிகள் தமது கரிய நிறம் மாறிச் செம்மைபெற்று விளங்கும். ஆனபின்பு, பந்தூகவர்ணங்களின்சோதியோடொத்தசோதி

யாதொன்றுண்டு ப்ராபாதிக ஸந்த்யையினுடைய சோதி, அதனோடு கலசிச் செவ்வியவாகி விளங்குகின்ற மேகசகலங்களாலே நிபிட மாயிருக்கும் ஸந்த்யா; ப்ரபாம்ஹாரஸ்ரீஸம்ஜியும் இப்படியேயிராநின்றதாய்த்து;—பந்தூகபுஷ்பத்தின் சோதிபோன்ற சோதியையுடைய ஸூர்யகிரணங்கள் மற்ற ஸகல தேஜஸ்ஸுகளையும் திரஸ்கரித்துத் தாமே வீறுபெற்று எங்கும் பரவுகின்றமையால் காளமேகங்களும் தம் நிறம் கெட்டு இந்தச் செந்நிறத்தையே கொண்டனவாகி விளங்குதல்பற்றி, 'ஸந்த்யாகாலாய ஸந்த்யாவிடபிதங்களான வதநங்களாலே ப்ரஹாஸிதையாயிற்று 'ப்ரபாஜாஸ்ரீ ஸம்ஜி. இத்தால், மேகங்களை சிவக்கடிக்கவல்ல சோதிப்பெருமை ஸூர்யகிரணங்களுக்கு உள்ளவாறு சொல்லிற்றாயிற்று. இப்படிப்பட்ட ஸூர்யஜ்யோதிஸ்ஸானது [ஸவிதாம் ப்ரத்யஹோதாநகே ப்ரணாமதா.] ஸந்த்யையோடு ஸாம்யம் சொன்னது போலவே காயத்ரியிலும் ஸாம்யம் திருவுள்ளம் பற்றுகிறார்; "ஓம் ஸாவித்ரீம் ஸஹஸ்ராக்ஷரீம்......ப்ரபாவகோசஷ்டிம்...ப்ரக்ஞா தாரிதாம்பரி...தத் ஸவிதுர் வரேண்யம்" என்று அது செய்யும் நித்யபாப நிபர்ஹணமாகிற காரியத்தையே இதுவும் செய்யக்கடவதென்கிறார். ஸந்த்யாகாலம் ஸாயம்—ஸந்த்யேகபாஸ்யம், என்றாகும். "ஸாயம்ப்ராதர்ஸந்த்யே" இதி வாணிநிஸந்தோக்தி........

ஸாந்த்யம் யத்த்வாந்தபர்யந்தம் ப்ரகடயதி நபஸ்ஸாரகாஜாட்காநி, ஸ்வாமிஸ்ரீம் யாந்தி காந்திம் கிரதி ப்ரதோஷயே ரௌத்ராக்ஷராபஜ்ஞாபு । கல்பாந்தாக்னிப்ரேக்ஷ்யம் ஹஜதி கிந்நிபாவஸ்ஸஹஸ்ரா ஹாஸஸ, ஜ்வாலாவதம்ஸவிவ ஸ்ந: ப்ரஹரணபதிஜம் யாதி ஸஸ்தி நோதம் ॥ (எ)

ப்ரதோஷஸமயே — யாதொரு ஸந்தர்ப்பந ஜ்வாலை கிளருங்காலத்தில்

நபஸ் — ஆகாசமானது

தூமௌகவ்யூஹா ஸாரூப்யம் கடயதி	புகைத்திரளின் ஸமுதாயத்தோடு ஒற்றுமையைத் தெரிவித்துக்கொள்ளுகின்றதோ,
தாரகாராஜகாநி	நக்ஷத்ரஸமூஹங்களானவை
ஸ்பௌலிங்கீம் காந்திம் யாந்தி	தீப்பொறிகளினது ஒளியை அடைகின்றனவோ,
மேரு:	மேருமலையானது
அங்காரஶங்காம் திஶதி	கொள்ளிக்கட்டையென்கிற ஶங்கையைத் தருகின்றதோ,
அக்நி:	அக்நியானது
ஶாந்தார்சி:	ஒளிமழுங்கப்பெற்றதாய்
ஐக்யம் பஜதி	(ஸுதர்ஶந ஜ்வாலையிற் காட்டில் வேறுபட்டு விளங்கமுடியாதபடி அத்தோடு) ஒற்றுமையை அடைந்துவிடுகிறதோ,
தினநிஶாவல்லபௌ	ஸூர்ய சந்திரர்கள்
நஷ்டபாஸௌ	தேஜஸ்ஸை இழந்தவர்களாய்
ஜ்வாலாவர்த்தாவிவ ஸ்த:	ஜ்வாலையின் வட்டம்போல இருக்கின்றனரோ,
தத்	அப்படிப்பட்ட
ப்ரஹரணபதிஜம் தாம	திருவாழியாழ்வானிடத்துண்டான தேஜஸ்ஸானது
வ: ப்ரீணாது	உங்களை ஸௌக்கியப்படுத்துக.

திருவாழியாழ்வானுடைய சோதி கிளருங்காலத்து மற்ற தேஜ:பதார்த்தங்களெல்லாம் ஒளிமழுங்கி அவஸ்துவாம் படியைப் பேசுகிறார் இதில். பலபல தேஜ:பதார்த்தங்கள் நிறைந்து விளங்குகின்ற ஆகாஶமண்டலமானது சக்ரஜ்வாலையின் முன்னே ஒளிகெட்டு 'இது புகைக்கூண்டு' என்னும்படியான நிலைமையை அடைகின்றது; நக்ஷத்ர ஸமூஹங்களெல்லாம் 'இவை க்ஷுத்ரமான நெருப்புப் பொறிகளாம்' என்னவேண்டும் நிலைமையை யடைகின்றன. மேருமலையானது 'இது அங்காரமோ' என்று ஶங்கிக்கும்படியாகின்றது. அக்நி

உதயமான காஷ்டத்துக்கும் அஸ்தமனமான காஷ்டத்துக்கும் மத்யமான காஷ்டத்துக்கும் ஸம்ஜ்ஞையென்று பெயருண்டு. இவ ற்றுள் ஏதேனுமொரு பொருளை இங்கே கொள்க. சந்த்ரனானது தன து ஒளியெல்லாம் மழுங்கப்பெற்று ஸூர்யமண்டலத்தில் ப்ரவேசிக்கும் வத்தை அடையுமத்தனை யொழியத் தானொரு தேஜஃபதார்த்தமா கத் தனித்து விளங்கப்பெறாது. இனி ஸூர்ய சந்த்ரர்களோ வெ ன்னில்; தங்களுடைய தேஜஸ்ஸு போனவழி தெரியாமல் ஒளியிழ ந்து, சிறுவர்கள் மாவலியாடும்போது தீவட்டம் காணப்படுமே அதுபோலவாகாநின்றார்கள்.

இப்படியாலே ஸகல தேஜஃபதார்த்தங்களையும் உருவழித்து எங்கும் மேம்பட்டு விளங்காநின்ற ஸூர்ய ஜ்யோதிஸ்ஸானது உங்களை மகிழ்விக்கவேணுமென்றதாயிற்று.

[ப்ரஸந்நா] ப்ரஸாதம் ப்ராப்தா—ப்ரஸந்நா. அஷ்டாத்யாயீ வ்யாகரணத்தில் "வாஸ்யாதிப்யோ ய:" என்ற ஸூத்ரம் இதற்கு நிதர்சநம். வாஸ்யா, த்ருண்யா, வந்யா, வாத்யா, ஜத்யா முதலியன. "தாரகாராஜிகா:" = நக்ஷத்ர ஸமூஹமெனப் பொருள்கொண் டால் ராஜிப்யாக ஸ்வாரஸ்யம் என்று கொள்ளவேணும்; அன்றியே, "க்ஷாரகோரகம் க்லீபே கலிகா கோரக: புமாந்" என்ற அமரகோசத்தின்படி பொருள் கொண்டால், 'புதிய அரும்புபோன்ற நக்ஷத்திரங்கள்' என்று கொள்ளலாம். ஸம்ஜ்ஞா நாமீயம்—ஸம்ஜ்ஞா. ... ...(எ)

உத்யத்யஸ்ய யதேஷ ஸதைவ நிகுஞ்ஜவனவாஸிகாஸு ஸ காமஷு, ஸம்ஸாரஸாகரஸேதுபூதி கவயநாம்ஸ்ததா வேமதேஜஸ்ஸு நிஷ்டேவ்யோ யேநிருபத்தோ வியந்தீவ ஸஹ ஸாஷஸ்ததைகாவி நேதஷ, வஸுஸம்பத ஸ்ததஸ்தாஞ் ஹிதவீதயே ஸநவோ ஸாஸ்ரா வ: ‖ (அ)

விகசநவஜபாஸனிகாஸ உதயே } அப்போதலர்ந்த ஜபாபுஷ்பத்தோ டொத்த திருவாழியாழ்வான்

அபி⁴வ்யோம்நி த்³ருʼஷ்டே ஸதி	ஆகாசத்தில் காணப்பட்டவளவில்
ஸ்வர்பா⁴நு:	ராஹுவானவன்
"ஏஷ: பா⁴நு: ஸ்பஷ்டம்" இதி அபி⁴யந்	"இதோ தென்படுகின்ற இப்புருஷன் ஸூர்யனேயாவன்" என்று நினைத்தவனாய் [புத்தியாலே]
வேக³த:	வேகமாக
அஸ்ய ஸகாஶமாக³த:—	இத்திருவாழியாழ்வானுடைய அருகே வந்தவனாய்
(அவ்வளவில்)	
யேப்⁴ய:	எந்த ஸூதர்ஶநகிரணங்களினாலே
நிஷ்டப்தஸ்ஸந்	மிகவும் தபிக்கப்பட்டவனாகி
நிவ்ருʼத்த:	திரும்பிப்போனவனாய்
அத்³யாபி	இன்றளவும்
ஸஹஸ்ராம்ஶும்	ஸூர்யனை
விது⁴மிவ	சந்திரனைப்போல
ஸஹஸா ஸ்ப்ருʼஷ்டும்	சீக்கிரமாகத் தொடுவதற்கு
நேஷ்டே	அஸமர்த்தனாயிராநின்றானோ,
தே	அப்படிப்பட்ட
பா⁴ஸ்வரா: பா⁴நவ:	மிக விளங்குகின்ற ஸூதர்சநகிரணங்களானவை
வ:	உங்களுடைய
அஹிதவிஹதயே	ஶத்ருவிநாஶத்தின் பொருட்டு
கல்பந்தாம்	ஸமர்த்தங்களாயிடுக.

உலகத்தில் ஸூர்யக்³ரஹணம், ஸோமக்³ரஹணம் என்ற இரண்டனுள் ராஹுவுக்குச் சந்திரன் பிடிபடுவது சீக்கிரமாகவும் ஸூர்யன் பிடிபடுவது விளம்பமாகவும் நிகழ்வது வழக்கம்; இதற்கு ஒரு ஹேதுவை உத்ப்ரேக்ஷிக்கிறமுகத்தாலே ஸூர்யசந்த்³ரஜ்யோதிஸ்ஸின் ப்ரதாபாதிஶயத்தைப் பேசுகிறார். அப்போதலர்ந்த ஜபாபுஷ்பம்போல் செக்கச்செகவென்றிராநின்ற திருவாழியாழ்வானை ஒருகால் ஆகாஶத்திலே கண்ட ராஹுவானவன் 'இதோ ஸூர்

யன் கிடைத்துவிட்டான்; இவனைப் பிடித்துக்கொள்வோம்' என்றெண்ணி ஸூர்யப்ராந்தியாலே ஸுதர்ஶநாழ்வானருகே விரைந்தோடிவந்தானும்; உண்மையில் அந்த வ்யக்தி ஸூர்யனல்லாமல் திருவாழியாழ்வானுயிருந்தபடியாலே அவருடைய கிரணங்களாலே நன்கு தபிக்கப்பட்டு மீண்டொழிந்தவனை அந்த ராஹுவானவன் அதற்குப் பிறகு மெய்யான ஸூர்யனிடத்தில் போவதற்கும் அஞ்சி 'இவன் ஸூர்யனேயாவன்' என்கிற நிஶ்சயவிஷயமான நிஶ்சயத்தைப் பெற்றபின்பே இவனருகே போகலாமென்றெண்ணி, சந்திரனை எப்படி ஶீக்ரமாகப் பிடிக்கிறானோ அப்படி ஸூர்யனைப் பிடிக்கமாட்டாமல் விளம்பியாநின்றானென்று ஹேதூத்ப்ரேக்ஷையிருக்கிறபடி. எனவே, ராஹுவுக்கு ஸஹஜமான ஸூர்யத்வேஷித்வம்போலன்றிக்கே ஸுதர்ஶநத்வேஷித்வம் அவனுக்கு ஸாதாரணமாயிற்றென்றதாய்த்து. இப்படி ஸூர்யனிற்காட்டிலும் அதிகப்ரதாபராய் விளங்காநின்ற திருவாழியாழ்வானுடைய கிரணங்களானவை உங்களுடைய பகைவர்களைப் பாற்றவேணும்.

வ்யாப்தி—அதிவ்யாப்தி இதி விஶங்க்யோத்ப்ரேக்ஷாவ்யாஹதி:. ஜபா =செவ்வரத்தை. நிஶ்ஶேஷம் யதா ததா தப்த: நிஷ்டப்த:. (அ)

தேவம் மேரூத்துங்கம் ப்ருதுபுஜஶிகரம் பிப்ரதம் மத்யதேஶே, நாபீத்வாராரவிந்தம் ஶேஷஶீர்ஷாஸநஸ்தம் । தேஜ: புஞ்ஜாயமாநம் த்ரிநயநகிரணாக்ருஷ்டவீசை: பரீதம், ஶ்ரீசக்ரம் வஸ்துஸாரம் இவ விஶஸந்தஸ்ஸ்திரம் ஸ்வஸ்திரஸ்து: ॥ (கூ)

ப்ருதுபுஜஶிகரம்	பருத்த புஜங்களாகிற சிகரங்களையுடையனாய்
மேரூத்துங்கம்	மேருமலைபோல் உயர்ந்தவனை
தேவம்	ஸுதர்ஶநபுருஷனை [ருப்பதும்
மத்யதேஶே பிப்ரதம்	நடுவிடத்தில் வைத்துக்கொண்டி
நாபீத்வாராரம்	நாபியாகிற தீவினுலே அழகிதாயிருப்பதும்

அரண்யவந்தீம் — அரங்களாகிற காடுகளையுடையதும்

ஶேஷஶீர்ஷாஸநஸ்தாம் — திருவனந்தாழ்வானுடைய முடியாகிற ஆஸநத்தின்மீது இருப்பதும்

(க்ஷிதேரிவ) வபுரந்யமேரும் — பூமியின் வேறொரு வடிவு படைத்ததுமான [மேருவோடொத்த]

நேமிம் பரீத்ய — நேமியைச்சுற்றி

விலஸந்தீ — விளங்கிக்கொண்டிருக்கிற,

திநகர கிரணாத்ருஷ்ட ஸீமா:
சக்ரவாளாசல இவ ஸ்தித: — ஸூர்யகிரணங்கள் கண்டறியாத ப்ரதேசத்தையுடைய[எல்லையையுடைய] லோகாலோக பர்வதம் போன்ற

திவ்யாஸ்த்ரார்ச்சி: — ஸ்ரீஸுதர்சநஜ்வாலையானது

வ: — உங்களுக்கு

ப்ரீத்யை ஸ்யாத் — ப்ரீதியின்பொருட்டு ஆயிடுக.

திருவாழியாழ்வானுடைய நேமியைச் சுற்றி அவருடைய ஜ்வாலை விளங்கும்படியைப் பார்த்தால் பூமியைச் சுற்றி லோகாலோக பர்வதம் விளங்குவதுபோல் உத்ப்ரேக்ஷிக்கலாம்படி யிருக்கையாலே அங்ஙனே உத்ப்ரேக்ஷித்துப் பேசுகிறார் இதில். நேமியை மேருவாக ரூபணம் பண்ணுவதற்கு இன்றியமையாத உபபத்திகள் பூர்வார்த்தத்திலே சொல்லப்பட்டன. «திநகரகிரணாத்ருஷ்ட ஸீமா:» என்ற விசேஷணத்தால் லோகாலோக பர்வதத்தோடு திவ்யாஸ்த்ரார்ச்சிக்குள்ள ஸாத்ருஶ்யமும் நிர்வஹிக்கப்படுகிறது.

மேரு எங்ஙனேயிராநின்றதென்றால்; பெரிய சிகரத்தையுடைய மேருமலையைத் தன்னிடையே தரித்துக்கொண்டும், தீவு, காடு, முதலியவற்றை யுடைத்தாயும், திருவனந்தாழ்வானுடைய திருமுடியின்மீது உள்ளதுமாயிராநின்றது; ஸ்ரீஸுதர்சன நேமியும் அங்ஙனே யிராநின்றதோ வெனில்; ஆம்; நேமிமத்யத்தில் ஸுதர்சன புருஷன் எழுந்தருளியிருப்பதானது மேருமலை திகழ்வதொக்கும். அப்புருஷனுடைய பருத்த புஜங்களானவை அம்மேருமலையின் பரிவாரஸ்தாநீயமாம். நாபியென்கிற அவயவம் த்வீபம்போன்றுளது; அரங்களானவை காடுகள் போன்றுள்ளன; இனி சேஷ

ப்ரகாசஸ்ஸம்பாதமும் ஒக்கும்; ஸாம்பப்ரபந்தத்தில், அப்படிப் பட்ட ஸகலவேதம் ப்ரதிபாத்யமும் ப்ராதந்யமுமிறே. இப் படிகளாலே ஸூர்யனின் ஸ்வரூபப்ரகாசமாயிராநின்றதாய்த்து மேரு. ஸூர்யனையச்சுற்றி லோகாலோகமென்னும் சக்ரவாளபர்வதம் வி ளங்குவதும், அம்மலையில் * இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறி யாத ஒரு பாகமுள்ளதும் புராணப்ரஸித்தம். த்வ்யாஸ்த்ரரஸ்மிக்கு அம்மலையோடு ஸாம்யம் ஸம்ப்ரயோகத்தாலே வரக்கடவதத்தனை. 'திநகரகிரணை: சக்ஷுஷா ஸீமா பஸ்யஸ:' என்கிற விசேஷணம் உபயபக்ஷத்திலும் ஒக்குமாகிலும் பொருளில் வாசியுண்டு. சக்ர வாளபக்ஷத்தில் ஸீமாபாதத்திற்கு ஸூக்ஷமமென்று பொருள்; ஸூர்ய கிரணங்களாலே பார்க்கப்படாததொரு இடத்தையுடையது அது. த்வ்யாஸ்த்ரரஸ்மியோவென்னில்; ஸூர்யகிரணங்களால் காணப்படாத எல்லையையுடையது; ஸூர்யகிரணங்களாலும் எல்லைகாணமுடியாத தென்றபடி. உத்தமாஸ்த்ரதத்தாலும் சவரிஷ்டேத்யமென்றால் தத்வே க்ஷயாஸ்த்ரதந்த்ரம் என்றதாமிறே.

இப்படிப்பட்ட ஸாம்பஸூர்யஜ்யோதிஸ்ஸானது உங்களுக்கு நித்யஸந்தோஷப்ரதமாகக் கடவதென்றாராயிற்று. ... (௬)

முக்யம் லோகஸ்ய சக்ஷுர்த்விவிதமபி ந்ருணாம் கர்ம க்ருந்தத் த்ரி
நேத்ரஸ்துத்யம், ஸாத்யாதிநாம் சரண்யம் ப்ரணயபரிஸரம் பத்
மதாம் ஸ்வர்ணவர்ணம் । ஸத்வாதிப்ரோக்ததாபாத்யபஹ நவகிரண
ச்ரேணி ரஜ்ஜூப்ரபாஸம், பக்ஷஸ்யாப்ரஸ்ததாஜ்ஞாபயமவரிவ்ருஷ
ஜ்யோதி ஸ்ரீதீக்ஷஹஸ்ரம் ॥ (௭)

லோகஸ்ய முக்யம் சக்ஷு:	உலகத்துக்கு முக்கியமான கண் போன்றதும்
த்விவிதம் கர்ம க்ருந்தத்	புண்யபாபரூபமான இருவகைக் கருமங்களையும் போக்கடிப்பதும்
த்ரிநேத்ரஸ்துத்யம்	முக்கண்ணனை சிவபிரான் வண ங்கப் பெற்றதும்

சதுர்வர்க ப்ரதாநதா	நான்கு புருஷார்த்தங்களையும் அளிப்பதும் [விப்பதும்
சுபிசுணம் வசுதாம் சமயசு	பகைவர்கூட்டங்களை நாசமடை
ஷட்குணாஸ்பத	(ஞானம் சக்தி முதலிய) ஆறு குணங்களை நிறையப்பெற்றதும்
ஸப்தார்சிஸ்ஸோஷிதாஷ்டாபத நவகிரண ச்ரேணிரஜ்யத்தசாசா	தீயில் காய்ச்சப்பட்ட ஸ்வர்ணத்தினதுபோன்ற புதிய கிரணவரிசைத்தால் சிவக்கின்றபத்துத் திசைகளையுடையதுமான
ஸுதர்சனாயுத ஜ்யோதிஃ	ஸ்ரீ ஸுதர்சன ஜ்யோதிஸ்ஸானது
வஃ	உங்களுடைய
ஸஹஸ்ரம் சதம்	பலபல துன்பங்களையெல்லாம்
வ்யபோஹ்யாத்	தொலைத்தருள்க.

இந்த ச்லோகத்தில் 'ஏகம், த்வி, த்ரி' என்று ஒன்று முதல் பத்துவரையிலுள்ள எண்களுக்கும் நூறு ஆயிரம் என்னும் எண்களுக்கும் வாசகமான பதங்களின் விந்யாஸக்ரமம் நோக்கத்தக்கது. இந்த ச்லோகத்தைக் கடாக்ஷித்தே ஸ்ரீவேதாந்த தேசிகனும் ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் (5) 'ஏகோவிஷ்ணுஸ்த்ரிதய ஸமதந்தார விஷ்டம் பஞ்சவர்ணீப்ரஸூதம் ஷாட்குண்யம் ஸப்த ஸப்தாஷ்டமகிரணவிராட் த்ருஷ்ட நவதைஸ்தா | தேவோதசாஸ்யாஸ்ருதகர சதசதகணிநீஸ்த்ரீயுத ஸஹஸ்ரமயைகீர்த்தரேஷஸ்ய விஷ்டஸ்தம்பஸுதர்சன ஸ்வாயம் வீதஸம்வேதனோதயஃ॥" என்ற ச்லோகத்தை யருளிச்செய்தார். இவர் ஆயிரத்தோடு நிறுத்தினார்; அவர் அதற்குமேலும் பேசினார் என்று வாசி காண்க.

இதில் "சுபிசுணம் வசுதாம் சமயசு" என்றவிடத்தில் ஐந்து என்ற எண்ணுக்கும் "நவகிரணச்ரேணி......" என்றவிடத்தில் ஒன்பது என்ற எண்ணுக்கும் பொருள்வகையில் தோற்றமில்லையாகிலும் ஸுப்தஸ்ருஷ்டியிலே சப்தஃ ஸம்வ்யாப்தி உண்டாகுமென்கிறவத்தனையே விவக்ஷிதம்; திருவெழுகூற்றிருக்கையிலும் இப்படியே யிறே காண்கிறது.

[க்ஷிப்ரம் க்ஷபயது ஸ்வநாதக:] புண்யபாபரூபமான இருவகைக்கருமங்களையும் தொலைப்பது என்கை; பாபத்தைத்தான் தொலைக்கவேணும், புண்யத்தையும் தொலைக்கவேணுமோ வென்னில்; ஆம்; பாபம் நரகாவஹம்; புண்யம் ஸ்வர்காதி க்ஷுத்ரபலப்ரதமாகும். ஒன்று இருப்புவிலங்கு; ஒன்று பொன்விலங்கு. "ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந: பரமம் ஸாம்யமுபைதி" என்னுமதிகாரிக்கு இருவினைகளும் தொலையவேணும்: "சார்ந்த இருவல்வினைகளும் சரித்து" என்றார் ஆழ்வாரும்.

[ஶதாங்காவயவபரிவ்ருடஜ்யோதி:] "ஶதாங்கஸ்யந்தநோ ரத:" என்ற அமரகோஶத்தின்படி ஶதாங்கஶப்தம் ரதவாசகம்; அதனுடைய அவயவங்களில் [பரிவ்ருடம்] சிறந்தது—சக்கரம். [ஜ்யோதிஸ்ஸஹஸ்ரம்]. "[illegible]" என்று ஜ்யோதிகள் விசேஷித்துச் சொல்லப்பட்டிருந்தாலும் இங்கே ப்ரகாஶஸாமாந்யம் விவக்ஷிதமென்க... ... ... (௧௦)

உச்சண்டம் யத்ஸ்வபிண்டம் நிர்விஶதி நப:கோஷ்டமர்க்க: ப்ரபாதே ஸர்வம் ஸம்ஹ்ருத்ய ... ஸ்வாத்மாநம் ... அர்க்க: ... ஸாவித்ரீ ... (௧௧)

உச்சண்டம் — (பகைவர் திறத்தில்) மிகவும் தீக்ஷ்ணமான

யத்ஸ்வபிண்டம் — யாவை சில ஸுதர்ஶந கிரணங்களின் பிண்டரூபமானது

நப:கோஷ்டம் — ஆகாஶமத்யத்தை

நிர்விஶதிஸதி — நெருக்கா நின்றவளவில்

அர்க்க: — ஸூர்யனானவன்

ஜ்வாலாதாபப்ரஶமிதஸவிதாஸ்வாஸ்ய	மிக்க தாபத்தினால் வாட்டப்பட்ட வடிவையுடையவனைக்கொண்டு
ஸாம்போபித்ஸு ஸம்ப்ருவர்ஷ்ஷு	ஜலத்தை ஏந்திக்கொண்டிருக்கிற மேகபடலங்களில்
ஸஸ்ருஸ்ரு	அடிக்கடி அவகாஹித்து
த்யாம் கடதி	ஆகாயத்தில் ஸஞ்சரிக்கிறானோ,
விது:	சந்திரனவன்
ஶுஷ்யத்ஸ்தோமயோத:	உலர்ந்துபோன அம்ருத ப்ரவாஹத்தையுடையனாய்
ஸம்யோந: க்ஷௌத்ரகோஶஸ்ய	தேனற்ற தேனடையினுடைய
ஸாம்யமேதி	ஒப்பை அடைகின்றானோ,
ஸுதர்ஶநேஶ:	திருவாழியாழ்வானுடைய
தே	அப்படிப்பட்டவையாய்
ஜநிதஸாவஹிதம்ஷ்டய:	வாணஸ்ருஷ்டியைப் பண்ணவல்லவைகளான
வ்ருஷ்டய:	கிரணங்களானவை
வ: ஜக்ஷந்து	உங்களைக்காத்தருள்க.

வளரொளிய கனலாழியின் ஜ்வாலாஸமூஹமானது ஆகாஶத்தை அளாவி எங்கும் பரந்தவளவில் அதனுடையதாபம்பட்டு மிகவும் வாட்டமடைந்த ஸூர்யன் தாபஶாந்திக்காக நீர்கொண்ட மேகமண்டலங்களில் அடிக்கடி அவகாஹித்து அதனால் தாபம் தணியப்பெற்றுத் தனது தொழிலைச் செய்ய வல்லவனாகிறான். ஸூர்யனுடைய கதி இதுவாயிற்று: சந்திரனோ வென்னில், [ஜ்வாலாதாபப்ரஶமிதவாஹ: என்ற விஶேஷணம் சந்திரனுக்கும் அந்வயிக்கக்கடவது.] தனது அம்ருதரஸமெல்லாம் ஶோஷமாகப் பெற்றவனாய்த் தேன் அற்ற தேனடைபோலும் நிலைமையை எய்துகின்றான். ஜ்யோதிஶ்சக்ரவர்த்திகளான சந்த்ரஸூர்யர்களை இப்பாடுபடுத்தவல்ல பெருமைவாய்ந்த ஸுதர்ஶந கிரணங்கள் உங்களைக் காத்தருளவேணுமென்றதாயிற்று. [உத்த:—ப்ரவாஹம். வ்ருஷ்டி:—ஸ்ருஷ்டி,] (௧௧)

பத்மௌகோ தீர்க்கிகாம்பஸ்ஸு ஶைலநிம்நதடே கைரிகாம்ப:ப்ரபாத:, ஸிந்தூரம் குஞ்ஜராணாம் திஶிதிஶி நபஸி ஸாந்த்யமேகப்ரபந்த: । வாராவாரே ப்ரவாலோ வநபுவி ச ததா ப்ரேக்ஷ்யமாண: ப்ரேக்ஷகௌகை:, ஸாதிஷ்டம் வ: *ப்ரபோதம் ஜநயது ஹேதிராஜத்விஷீணௌகராஶி: ॥ (கஉ)

தீர்க்கிகாம்பஸி	வாவிகளின் தண்ணீரில்
பத்மௌக:	செந்தாமரை மலர்களின் திரளாக[வும்]
ஶைலநிம்நதடே	மலைச்சாரலில்
கைரிகாம்ப:ப்ரபாத:	தாதுஜலங்களின் அருவி வீழ்ச்[சியாகவும்]
திஶிதிஶி	திசைகள்தோறும்
குஞ்ஜராணாம்	திக்கஜங்களினுடைய
ஸிந்தூரம்	சிந்தூரப்பொடியாகவும்
நபஸி	ஆகாயத்தில்
ஸாந்த்யமேகப்ரபந்த:	அந்திப்போதை மேகத்திரளாக[வும்]
வாராவாரே	கடலில்
ப்ரவால:	பவழமாகவும்
வநபுவி ச	காட்டிடத்தில்
ததா (ப்ரவால:)	பல்லவமாகவும்
ப்ரேக்ஷகௌகை: ப்ரேக்ஷ்யமாண:	ப்ரேக்ஷகர்களாலே பார்க்கப்படாநின்ற
ஹேதிராஜத்விஷீணௌகராஶி:	திருவாழியாழ்வானது கிரணஸமூஹமானது
வ:	உங்களுக்கு
ஸாதிஷ்டம் ப்ரபோதம் ஜநயது	நல்ல அறிவைஉண்டாக்குக.

திருவாழியாழ்வானுடைய ஜ்யோதிஸ்ஸமூஹம் ஸர்வவ்யாபியென்னுமிடத்தை ஒரு சமத்காரமாகப் பேசுகிறார் இதில். வாவித்தடம், மலைச்சாரல், ஆகாயம், கடல், காடு முதலான எல்லாவிடங்களிலும் திருவாழியாழ்வானுடைய சுடர்ச்சோதிவெள்ளமே வியாபித்துக்கிடக்கின்றது; ஆனால் உண்மைகண்டறியகில்லாத ஸாமாந்ய ஜநங்கள் "இவையெல்லாம்ஸுதர்ஶநஜ்யோதி:புஞ்ஜங்களேயாம்"

என்று அறுதியிடமாட்டாமல் ஒவ்வோரிடங்களில் ஒவ்வோர் வஸ்துவாக மயங்குகின்றன: அந்த உத்ப்ரேக்ஷாலங்காரத்தை வாவித்தடங்களில் தாமரைமலர்களாகவும், மலைச்சாரல்களில் காவிநீர்ப் பெருக்காகவும், வ்ருக்ஷங்களிடத்தில் சிந்தூரச் செம்பொடியாகவும், ஆகாயத்தில் ஸந்த்யாராகமாகவும், கடலினுள் பவழமாகவும், காட்டிடத்தில் செந்தளிராகவும் ஜநங்கள் காணுகின்றனவித்தனை. (உண்மையறியவல்ல யதார்த்ததர்சிகள் இங்ஙனே ப்ரமிக்கமாட்டார்கள்; பத்மம், கௌரிகாதாதுவாதம், ஸிந்தூரம், ப்ரவாளம் முதலானவற்றை ஸாதாரண ஸ்வரூபமாகவே காண்பர்கள்—என்பது உள்ளுறை) இஃது அதிசயோக்தி.

த்ருதியபாதத்தில் 'தயா' என்பதனால் 'ப்ரவாள:' என்றதை அந்வயித்துப் பொருள்மாத்திரம் வேறாகக் கொள்ளத் தக்கது. "ப்ரவாளோ ஸ்த்ரீ கிஸலயே வீணாதண்டே ச வித்ருமே" என்ற நிகண்டுவின்படி ப்ரவாளசப்தத்துக்குத் தளிரென்றும் பவழமென்றும் பொருளுண்டாதல் உணரத்தக்கது.

"ஸாயிஷ்ணவ: ப்ரமோதா:" என்றும்.....ப்ரபோதா: என்றும் பாடபேதமுண்டு. ப்ரமோத:—ஸந்தோஷம். ப்ரபோத:—சிறந்த ஞானம். [தந்தஜயிஷ்ண:] தந்தஜயிஷ்ணு என்று எம்பெருமானுக்குத் திருநாமமிருப்பதுபோலவே திருவாழியாழ்வானுக்குமுண்டு. ஜிஷ்ணும் ஸம்ஹத்ய ஜிஷ்ணு:; ஸ சாஸௌ ராஜ்ஞோ ஸ்ரீ விக்ரஹ:. அதவா—ஜிஷ்ணும் ஸம்ஹத்ய ஜிஷ்ணு; தஸ்ய ராசி: என்பாருமுண்டு: ஸமூஹத்தினுடைய ஸமூஹம் என்பதனால் பாஹுல்யாதிசயமே தோற்றும். ... ... (கஉ)

ஹா தேவ! ஹா தேவ தயாஸ்ரித! காமதேநோ! தே க்ருத்தேஜ:, தாரா:! ஸ்தாவராத்யஸ்ரோதஸ்விநோ! நதஸ்ய ஸௌஹ்ரதஸ்ய ஹேதிராஜ:! ஸம்ஸ்மிதம் நந்தஸ்யா பத்தர்யஸ்மை வக்த்ராஜாம்போஜஸ்ய, ப்ராக்ஷாகம் ப்ரணதாப்ரஸந்நதா வக்த்ராய க்ருஷ்ணாய (கங)

யதம்சூதயஸமயே	எந்த ஸுதர்சன கிரணங்களின் உதயகாலத்தில்
நபஸ்ஸ்தா:	ஆகாசத்திலுள்ள தேவஸ்த்ரீபுருஷாதிகள்
‘ஹே ஸவித:! த்வயா பா: ந பாதி’	‘ஓ ஸூர்யனே! உனது தேஜஸ்ஸானது (ஸுதர்சன தேஜஸ்ஸின் முன்னே) விளங்கவில்லை (என்று ஸூர்யனை நோக்கியும்)
‘ஹே சந்த்ர! தே தேஜ: க்வ?’	‘சந்திரனே! உனது தேஜஸ்ஸு எங்கே?’ (என்று சந்திரனை நோக்கியும்)
‘ஹே தாரா: தூரதஸ்திஷ்ட’	‘நக்ஷத்திரங்களே! தூரத்தில் நில்லுங்கள்’ (என்று நக்ஷத்திரங்களை நோக்கியும்)
‘அக்நே! அப்யேதாஸி’	‘அக்நிபகவானே! சப்பையாய்விட்டாயே!’ (என்று அக்நியை நோக்கியும்)
‘ஹே வஜ்ராக்நிதேஜ:! தவ ஸ்வாதந்த்ர்யம் ந	‘ஓ வஜ்ராக்நியினது தேஜஸ்ஸே! உனக்கு தனித்து விளங்கக்கூடிய ஸ்வாதந்திரியமில்லை (என்று வஜ்ராக்நி தேஜஸ்ஸை நோக்கியும்)
இத்தம் சம்ஸந்தி தே	இவ்வாறாகச் சொல்லுகின்றனரோ, அப்படிப்பட்ட பெருமைவாய்ந்த
அஸ்த்ரராஜ கிரணா:	திருவாழியாழ்வானுடைய கிரணங்கள்
யுஷ்மாகம்	உங்களுடைய
ப்ரளயதாவ ப்ரஸவ பவ ரோகவிக்ரமாய	ப்ரளயமான தாவத்ரயாதிகட்கு உத்பத்திஸ்தானமாகியஸம்ஸாரமாகிற நோய் தீர்வதன்பொருட்டு
க்ரமந்தாம்	பராக்ரமிக்கட்டும்.

கீழ் ஏழாவது ஸ்லோகத்தில் ப்ரதிபாதித்த அர்த்தத்தையே ப்ரகாரபேதத்தாலே இதிலும் அருளிச் செய்கிறார்.

திருவாழியாழ்வானுடைய கிரணங்கள் கிளரும்போது, ஆகாசத்தில் திவ்யவிமாநவாஸிகளான தேவகந்தர்வாதிகள், ஸூர்யன் சந்திரன் முதலிய தேஜஃபதார்த்தங்களை நோக்கி இங்ஙனே சொல்லுகிறார்களாம்:—அப்பா ஸூர்யனே! உனது ஒளி விளங்கமாட்டாமல் மங்கிப்போயிற்றுக்காண்; அப்பா சந்திரனே! உன் தேஜஸ்ஸு எங்கே புக்கொளித்தது? நக்ஷத்திர கணங்களே! இனி நீங்கள் கடக்க நிற்கவேண்டுமத்தனை; ஓ ஸஹஸ்ரபவானே! உன்னை நாங்கள் பெருமதிப்பனாக நினைத்திருந்தோமே; ஒளியற்றவனாய் சப்பையாய்விட்டாயே!; ஓ வஜ்ராக்நிதேஜஸ்ஸே! நீ ஸுதர்ஸநதேஜஸ்ஸில் லயித்து உருவழிந்துபோகும் பரதந்த்ரனாய் விட்டாயேயன்றி ஸ்வதந்த்ரதேஜஸ்ஸு அல்லைகாண்; என்று நின்றார்கள் வஸ்துதஃ இப்படி சொல்லுகிறார்களோ வென்னில்; சொல்லாவிடினும் இங்ஙனே சொல்லவேண்டும்படியான நிலைமை விளைகின்றதென்கையிலே தாத்பர்யம். அப்படிப்பட்ட ஸுதர்ஸந கிரணங்கள் உங்களுடைய ஸகல து:க்ககாரணமான ஸம்ஸாரரோகத்தைத் தொலைக்கக்கடவன வென்றாராயிற்று. இரண்டாம் பாதத்தில் "தாரா: ஸ்பாரா:" என்றும் பாடம் வழங்கும். அப்போது,(ஸ்பாரா,) ஸ்ப. என்று ஸ்வயம்ஸ்தவநபாவமாம். அதிற்காட்டிலும் ஸ்வயம்ஸ்தவநபாவமேபொருட்சேர்த்திக்கும் அக்ஷரானுப்ராஸத்திக்கும் ஒக்கும். பெரியோர் ஓதும் பாடமும் இதுவே. ஸ்பஷ்டி—ஸ்தாக, ஸ்தூ, ஸ்த. என்று பாவம்.

ஜக்த்வா கண்டேஷு தீர்க்காந்ஜ்வலதஸிவிஸ்ருதாக்ஷிஷு
ஸ்வேஷ்வாயுஷ்யேஷு, வீக்ஷ்யாக்ஷுஸ்த்ருஃஸ்வப்நஷேந்தாப்ஸ்வெ
நாஸ்ஸ்வி... மாநோ வஸ்துக்ரஹதாஃபரஸ்பரதாஸம் ப்ரஸ்ரிதா
நாம் தாஹாநாம், ஸதீம் ஸுமோகாத்ரஸம்ஹாரநதயோஃ
ஸாநந்தநாம் த்ருஶாம் ॥ (கச)

அரிஸுத்ருஶாம் — ஶத்ருஸ்த்ரீகளுடைய [அஸுர ராக்ஷஸமாதர்களுடைய]

கர்ணேஷு	காதுகளில் (மங்களாலங்காரமாக அணியப்பட்டிருந்த)
தூர்வாங்குராந்	அறுகம்புற்கதிரை
ஜக்த்வா	தின்றுவிட்டும்
ஸுரஸுந்தரீணாம்	தேவமாதர்களுடைய
சக்ஷுஷு	கண்களில் (பெருகிக்கொண்டிருந்த
அம்பூம்ஷி	நீரை [த
பீத்வா	குடித்துவிட்டும்
ஸவ்ருஷம் யதா ததா சரந்த்ய꞉	தருமநெறி வழுவாமல் திரிகின்றவையாயும், (பசுக்களின் பக்ஷத்தில்) 2. காளைகளோடுகூடத்திரிகின்றவையாயும்
க்ருஷ்ணேந ஸமுபேந	க்ருஷ்ணனாவானை எம்பெருமா [னாலே
அநுகதா꞉	பின்செல்லப்பெற்றவையாயும்
அர்த்திநாம்	அடுத்தவர்களுக்கு
ஸாரம் க்ஷீரரஸம்	சிறந்த க்ஷீரரஸத்தை (2) சிறந்த மோக்ஷருசியை
துஹாநா꞉	கறந்து கொடுப்பவையாயும் (2) உண்டுபண்ணுகின்றவையாயும் இருக்கிற
ஸர்வலோகத்ரய ஸந்தாபஹா꞉ கருணாபாங்கா꞉	ஸர்வகாலத்தாலே மூவுலகவிருளையும் விலக்கின திருவாழியாழ்வானுடைய கிரணங்களானவை, (2) தனது கடாக்ஷ வீக்ஷணத்தாலே மூவுலகத்தவரின் அஜ்ஞாநாந்தகாரங்களைப் போக்கியருளும் கண்ணபிரானுடைய பசுக்களானவை
வ꞉	உங்களுக்கு
ஸாநந்தாம் ஸம்பதம்	தொடர்ச்சி அறுமல் ஶாஶ்வதமாயிருக்கக்கூடிய செல்வத்தை
தததாம்	தந்திடுக.

திருவாழியாழ்வானுடைய கிரணங்கள் உங்களுக்குத் தொடர்ச்சியறாத செல்வத்தைத் தந்திடுக வென்கிறார். "ப்ராதஸ் ஸம்ஸேவ்ய ஸமீரிதோ பஹூநி உதகாநி பீத்வா ஸ்தோஷு பஸவ இவ ராணா: பாந்து தே ஸ்ரீ ஸுதர்ஶநாக்ஷ்வ: ..." என்ற ஸ்ரீ பாகவதத்தின் படி ஸாரஸ்வதத்திற்கு உள்ள பலபொருள்களில் பசு என்ற பொருளையும் கிரணம் என்னும் பொருளையும் ஏககாலத்தில் இங்கே விவக்ஷித்து 'காவ:' என்றருளிச் செய்கிறார். 'சக்ராம்ஶவ:' என்னும் பதம் சக்ரம் பிபர்த்தி என்ற வ்யுத்பத்தியால் கண்ணபிரானையும், 'சக்ரம்வாபௌஸம்ஶவ:' என்னும் வ்யுத்பத்தியால் திருவாழியாழ்வானையும் சொல்லும். (சக்ரபாணி:, சக்ரம் ஶ்ரேஷ்டம் ஸுதர்ஶநா...,) ஆகவே, "சக்ரம் ஸந்த்யாம் ஸ்தா:" என்ற வாக்கியில், திருவாழியாழ்வானுடைய கிரணங்கள் என்ற பொருளும் கண்ணபிரானுடைய பசுக்கள் என்ற பொருளும் ஆரும்படியருளிச் செய்கிறார் வ்யுத்பத்திஶாஸ்த்ரவைபவத்தாலே. இரண்டிற்கும் பொருந்த விசேஷணங்களிடுகிற வைலக்ஷண்யத்தையைப்பாரீர். [காமம் தத்யுச் சக்ராம்ஶவ: கணைஷ்டுவ்யாஜ்ஞாம் ஜந்ய, ஸ்ரவத்ய ஸ்தாந கக்ஷிஷ்டு ஸஹ: வீக்ஷ்வா வ வாஸ்த்ய:] பசுக்கள் புற்களைத் தின்று தண்ணீரைக் குடித்துத் திரியும்; ஸுதர்ஶநகிரணங்களும் அப்படியே செய்கின்றன;—அஸுர ராக்ஷஸமாதர்கள் தங்கள் காதுகளில் ஸௌபாக்யார்த்தமாக அணிந்துகொண்டிருந்த அறுகம்புல்லைத் தின்றுவிட்டுத் தேவமாதர்களுடைய கண்களிற் பெருகிக்கொண்டிருந்த ஶோகாஶ்ருப்ரவாஹத்தைப் பருகிவிட்டு ஸவிலாஸமாகத் திரிகின்றனவாம். இதனால் பெறப்பட்டதென்னென்னில்; அஸுர ராக்ஷஸஸ்த்ரீகள் விதவைகளாம்படி அவர்களது பர்த்தாக்களையொழித்து, அவர்களால் நலிவுபட்டிருந்த தேவஜாதியின் து:க்கத்தைத் தீர்த்தவை ஸுதர்ஶநகிரணங்கள் என்றதாகிறது. கழுத்தில் மங்கலஸூத்ரதாரணம் போலே காதில் தூர்வாங்குரவிந்யாஸமும் ஸுமங்கலிகளுக்கே உரித்தாகிறது; அது போயிற்றென்றால் வைதவ்யம் வந்தவாறுமத்தனை. ஶத்ருக்கள் செத்தபின்பு தேவ

மாதர் அழுவதற்கு ப்ரஸக்தியில்லாமையால் அவர்களுடைய கண்ணீர் ஸுதர்சநகிரணங்களால் பருகப்பட்டதாக உத்ப்ரேக்ஷிக்கப்பட்டது.

"ஸவ்ருஷம்" என்பது 'வ்ரஜந்தி' என்ற சரணக்ரியையிலே விசேஷணமாக அந்வயிக்கக் கடவது. [ஸவ்ருஷம் வ்ரஜந்தி] வ்ருஷசப்தத்திற்கு வ்ருஷபமென்றும் தர்மமென்றும் இரண்டுபொருள். பசுக்கள் வ்ருஷபத்தோடே கூடித்திரியும், ஸுதர்சந கிரணங்களானவை தர்மத்தோடே ஸஞ்சரியாநின்றன. அதாவது—பாபிகளை நிரஸித்தலும் தார்மிகர்களைப் பாதுகாத்தலுமாம். அதர்மமறியாத எம்பெருமான்படியே இருக்குமாய்த்து ததாசயமும். [க்ருஷ்ணேந வத்ஸபசவ: ஸநாதா:] க்ருஷ்ணனான எம்பெருமான் பின்செல்லப்பெற்றிருக்கை பசுக்களுக்கும் ஸுதர்சநகிரணங்களுக்கும் ஒக்கும். இவைபுகுமிடமெங்கும் எம்பெருமானும் புக்கு நிற்கிறானிறே ஸர்வேச்வராவிஷ்டத்வ விசேஷாத்||

[ஆச்ரிதாநாம் வரதுக்தரஸம் துஹாநா:] "துக்தம் பயஸி சேஷஸ்யாத் பூர்ணே ஸம்பாவிதே த்ரயே। பராத்மநி ச மோக்ஷே ச" என்ற நிகண்டுகோசத்தின்படி துக்தசப்தத்துக்குள்ள பல பொருள்களில், பால், மோக்ஷம் என்ற இரண்டு பொருள்கள் இங்கே விவக்ஷிதம். பசுக்கள் தம்மை எய்தினர்க்குப் பாலைத் தரும். இவை முக்தியைத்தரும். "ஸ்வாலோகநாத் த்ரிதாபஸந்ததேஸ:" என்பதை ப்ரதமாபஹுவசநாந்தமாகக் கொண்டு (காவ:) என்பதற்கு விசேஷணமாக அந்வயிப்பர் சிலர். ஷஷ்ட்யந்தமாகக்கொண்டு வத்ஸதரீக்கு விசேஷணமாக அந்வயிப்பது சிறக்கும். [ஸ்வாலோகநாத் த்ரிதாபஸந்ததேஸ: வத்ஸதர்ய:] ஆலோகமென்று ப்ரகாசத்துக்கும் பார்வைக்கும் பெயர். எம்பெருமான் தனது கடாக்ஷ வீக்ஷணத்தாலே த்ரிதாபஸந்ததியையும் போக்கியருள்பவன்; திருவாழியாழ்வான் ஸ்வப்ரகாசத்தாலே அங்ஙன் செய்பவன். முதல்பக்ஷத்தில் தச்சப்தாத்யாஹாரம் அஜ்ஞாநம்.

[ஸாநந்தப்ரஜ்ஞானம் [illegible]] வென்பதும் தொடர்ச்சி போகாதே கூடியிருக்கையாவது விச்சேதமற்றிருக்கை; ஸாஸ்வதமான என்றபடி. செல்வத்தை மேன்மேலும் பெருகச் செய்கவென்கை. [[illegible]] இந்த திருநாமம் "[illegible]" என்ற யாதவில் நிஷ்டமென்று [illegible] சிலர், '[illegible], [illegible], [illegible]' என்றுகொண்டு "[illegible]" என்றன்றோ ப்ரயோகிக்க வேணும்; [illegible]மென்னவொண்ணாதேயென்று வொதம்பண்ணு வர்கள். அங்ஙனன்று; [illegible]யில் "[illegible]" என்றொரு யாதவுண்டு; அதில் [illegible] ரூபமாய்த்து இது. [illegible], [illegible], [illegible]—இதி |
"[illegible]" என்றார் ஆழ்வானும் [illegible]வத்திலே.

இப்லோகத்தில் கண்ணபிரானுடைய புசுக்களின் வரமாக ஒரு பொருள் தோன்ற ஸமஷ்டிஸமாஸம் பண்ணின விதற்குக் கவியின் [illegible] மேயாய்த்துப் [illegible]. இங்கே ஸ்ருதியா? உபமா? ரூபகமா? ஸ்லேஷமா? எங்ஙனே நிர்வஹிப்பதென்னில்; சிலர் சொல்லக்கூடும்—உபமாவாசகமான இவாதிகள் இல்லாமையாலே உபமாலங்காரம் சொல்ல இடமில்லை; [illegible] "[illegible] இதி [illegible]" என்ற ஸ்லோகத்தில் போலே [illegible] சொல்வதற்கும் இடமில்லை. "[illegible]" என்ற [illegible] ஸ்லோகத்திற்போல [illegible] ஸ்லேஷம் சொல்வதற்குமில்லை; [illegible] இல்லாமையாலே. ஆனபின்பு ஸ்ருதியேயாகக்கடவதென்பர்; அங்ஙனல்ல; "[illegible]

யோயஶோபாஸ்ருஷ்டா: | ஸததமுமேதா மஹஸ்ராம்ஶவோ: ஸவி-
துர்திக்ஷிப்தகாவ்யஸம்ஹிதி:||” என்ற தேவதாசதகச்லோ-
கத்திற்போல ஶ்ருஷ்டாஜ்ஞமான ஸமோஹாக்யமாகக்கடவது. ஸவி-
யாவி ஸர்வஸ்வாதமான ஒரு அர்த்தத்தைத் தோற்றுவித்தல் வா
ர்த்தாதிஶய ஹேதுவாம் என்ற குமாரிலஸ்வாமி ஸாஸ்த்ர
ஹம் இங்கே அநுஸந்தேயம். ... ... (௧௪)

ஸேநாந்யம் ஸேநாம் மாஹேந்த்ரீம் மஹதி ரணமுகே ஸம்ப்ரமம் பயம்
நயந்தீ:, உத்ஸேகோஷ்மாமர்ஷதோர்ஷ்ம ப்ரஸமரவிஷமா ஆஸுரீர்யா
க்ரஸதே | விஶ்வம் விஶ்வம்பராத்யம் ரதாங்கபதேர்லீலயா
பாலயந்தீ, ஸம்ருத்தி: தீதிதீநாம் வ்ருஜிநஜநநஜந்மஜ்யாநிய
ஸ்தாஜ்யம் வ: || (௧௫)

மஹதி ரணமுகே	பெரிய போர்க்களத்தில்,
ஸேநாந்யம்	தலைவர்களோடு கூடினதான
மாஹேந்த்ரீம் ஸேநாம்	இந்திரனது சேனையை
ப்ருஶம் பயம் நயந்தீ:	மிகவும் பயப்படுத்தாநிற்கிற,
உத்ஸேகோஷ்மாமர்ஷதோர்ஷ்ம ப்ரஸமரவிஷமா ஆஸுரீ:	செருக்கினால் எதிரிகளின் அழலைப் பொறுக்கமாட்டாது போர் செய்யத்துடிக்கிற கைகளையுடையரான அஸுரர்களின் கூட்டங்களை
யா க்ரஸதே	யாதொரு ஸுதர்சந கிரண ஸம்ருத்தியானது கவளீகரிக்கின்றதோ,
விஶ்வம்பராத்யம் விஶ்வம்	பூமி முதலிய எல்லாவுலகத்தையும்
லீலயா பாலயந்தீ	விளையாட்டாகவே ரக்ஷியாநின்ற
ஸா	அப்படிப்பட்டதான
